தொழில் முரசு

1953 ஜனுவரி



THOZHIL MURASU 4

McGraw-Hill Publications.

For Business, Trade, Engineering & Industry.

For Business Executives

1 Business Week.
2 The McGraw-Hill American Letter.
3 McGraw-Hill Digest

For Manufacturing Officials

4 American Machinist
5 Chemical Engineering
6 Chemical Work
7 Factory Management & Maintenance
8 Food Engineering
9 Textile World

For Construction Engineers

10 Construction Methods & Equipment
11 Engineering News Record

For Electric Engineers

12 Electronics

For Power Plant Engineers

13 Power

For Welding Engineers

14 Welding Engineer

For Appliance Dealers

15 Electrical Merchandising

For Electrical Men

16 Electrical Construction & Maintenance
17 Electrical World

For Mining Engineers

18 Engineering & Mining Journal
19 Metal & Mineral Markets

For Design Engineers

20 Product Engineering

For Transportation Officials

21 American Automobile
22 Buss Transportation

For Distributors

23 Industrial Distribution

For Drug & Cosmetic Dealers

24 Pharmacy International

and

600 Other Puplications,

all of Americas' Business & General Interest.

As an authorized subscription agency for MeGrow-Hill International Corporation, we are in a position to attend to all of the subscription details for you. We will transmit your order, arrange for currency exchange, and forward your remittance to the publisher.

Please write to us:-

McGraw-Hill Subscription Agency
"THOZHIL MURASU" Office,
NAGERCOIL. S. India.

தொழில் முரசு.

ஆசிரியர்:- ஸி. ஏ. பெருமாள். நாகர்கோவில்

முரசு 2 ஜனுவரி 1953 ஒலி 1

பொருளடக்கம்.

			பக்கம்
1	தலையங்கங்கள்:		
	1. புதுவருடம்	....	4
	2. கண்கலங்கும் கைத்தறி மக்கள்	....	5
	3. இன்னும் தேவையா?	....	6
2	கட்டுரைகள்:		
	1. கோவைநகரம் கொடுத்துதவிய விஞ்ஞான வள்ளல்	....	7
	2. ரொட்டியும் வெண்ணையும் ஜன்ம சத்துருக்கள்	....	9
	3. மோட்டார் ஓட்டும் தொழில்	....	10
	4. துருக்கியர் 150 வயதுவரை வாழ்கின்றூர்கள்	....	11
	5. வைரங்களின் விலை என்னுகுமோ	....	19
	6. ஓர் புத்தக கம்பெனியின் மகத்தான சாதனை	....	20
	7. வீட்டுத் தோட்டவேலை	....	23
	8. கோழி வளர்த்தல்	....	24
	9. மேசையின்மேல் பருமரங்கள்	....	26
	10. தக தக ததியோதனம்	....	27
3	சிந்தனைக்குரிய செய்திகள்:		
	1. தேரையரும் உருளைக்கிழங்கும்	....	12
	2. எட்டிப்பறிக்கும் பழமரங்க்ள்	....	12
	3. எத்தகைய மோட்டார் டிரைவர்கள் நமக்கு வேண்டும்	....	15
	4. மனதைக் கொள்ளைகொண்ட மந்திரம்	....	18
4	கருத்தலிருத்த வேண்டியவை:		
	1. எனது தீர்மானம்	....	6
	2. மூன்று பிரதிக்ஞை	....	8
	3! இதனை உபயோகித்து வாருங்கள்	....	21
	4. எறும்பு உபத்திரவம்	....	22
	5. பொன்னில் பொறிக்க	....	22
5	நெஞ்சு பொறுக்குமா நினைத்துப் பாருங்கள்:	....	13
6	இனக்குரலில் நின்ற சுவாசம்:	....	28
7	வழுக்கி விழுந்தவை:	....	25
8	மறைந்துகிடக்கும் பிராணிகளும் பட்சிகளும்:	....	33
9	பகுதிகள்:		
	இவை தெரியுமா	....	14
	உறுதுணை	....	15
	புதுப்பொருள்கள்	....	16
	முரசொலி	....	29
	பொழுதுபோக்கு	....	34

10 பல்வேறு விஷயங்கள்:

(1) வங்காள வெள்ளை மத்தாப்பு. (2) உலக அறிவை உருவாக்க மொழிகளால் முடியும். (3) உலக உணவு உற்பத்தியைப் பெருக்க ரசாயனப் பொருள்களின் உபயோகம். (4) அமெரிக்க பத்திரிகை சுதந்தரம் முதலியன.

தொழில்முரசின் பாலாரிஷ்டம்.

பக்திரிகைத் தொழிலில் ஏற்கனவே ஏற்படும் பாலாரிஷ்டம் தொழில்முரசையும் பற்றிபிடிக்காமல் விடவில்லை. அதன் காரணமாக அது சென்றவாண்டு தனது கடனைச் செவ்வனேயாற்றுவதற்குத் தவறிவிட்டது. புதிய இவ்வாண்டில் இறையுளமும் அன்பர்கள் திருவுளமும் இனிது சுரக்குமாக.

ஆசிரியர்.

தொழில்முரசு

விளம்பர விகிதங்கள்

முழுபக்கம்	ஒருதடவை	ரூ. 40/-
அரைப் பக்கம்	,,	ரூ. 20/-
கால் பக்கம்	,,	ரூ. 10/-
1 × 2" பானல் விளம்பரம்		ரூ. 2/-

கல்லர் விளம்பரங்களுக்கும் காண்டாரக்ட் விளம்பரங்களுக்கும் எழுதிக்கேட்க.

தனிப் பிரதி விலை அணு 4

வருடச் சந்தா ரூ. 3

அறிவிப்பு.

நமதுகாரியாலயத்தைச்சேர்ந்த ஸ்ரீ P. M. சுந்தரம் அவர்கள் பத்திரிகைக்கு விளம்பரங்கள், சந்தாதார்கள் சேற்க சுற்றுப்பிரயாணம் செய்கிறூர்கள். அன்பர்கள் அவர்களுக்கு துணையிருந்து ஊக்கமளிக்கும்படி வேண்டிக்கொள்ளுகிறேன்.

மானேஜர்.

"உழவுக்கும் தொழிலுக்கும்
வந்தனை செய்வோம்"

தொழில் முரசு.

ஜனுவரி 1953

புது வருடம்.

புதுவருடம் பிறக்கப்போகின்றது, புது வாழ்வு வாழலாம் என்று மக்கள் மனம் இறும்பூது எய்வது எந்த நாட்டிலும் இயல்பு. கஷ்டங்கள் தீர்ந்தது, இனி நாம் கதிபெற்று வாழலாம் எனத் தொழிலாளர்களும், துன்பங்கள் தொலைந்தது இனி நாம் இன்புற்று வாழலாம் என விவசாயிகளும் புது வருடத்தைக் கருதிக்கணித்து கடுகி இருப்பது சகஜமே. மக்கள் சமாதானமாகவும் சுபிட்சமாகவும் வாழ்வதற்கு அடிப்படையான தத்துவம் சகோதரப் பண்பாடு வளர்வது என்ற ஒன்றே உளது.

இன்றையஉலகமோ அதற்கு இடம்கொடுக்கவில்லை. உலக நாடுகள் இரு பிரிவுகளாகப் பிரிந்து ஒன்றையொன்று கூட்டு சேர்த்து வருகின்றன இரும்புத்திரை உலகம் ஒன்று, அணுசக்தி அதிகார உலகம் மற்றொன்று என்ற இரு கோஷ்டிகள் உலகை விலவிலக்கச் செய்து அதனால் மக்கட்கூட்டம் மதிமயக்கம் கொண்டு கிடக்கின்றது.

சமாதானம், சமாதானம் என்று நாற்றிசைத் தலைவர்களும் வருடம் பூராவும் பாடுபட்டும் பலன் பெற முடியாமல் சலித்தும் களைத்தும் போயினர். உலகத் தலைவர்கள் ஒருவர்க்கொருவர் மனம் விட்டுப் பேச மனமில்லாமல் உள்ளொன்றும் புறமொன்றுமாக ஐக்கிய நாட்டுப் பேராங்கில் நாடகம் நடித்து வெளியேறிவிடுவது வழக்கமாகிவிட்டது. இந்த நிலையில் மக்கள் என்செய்யக்கூடும்? மாநாடுகள் என்செய்யவல்லது?

அடிமை வாழ்வும் வறுமை நோயும் அடியற்றுப்போவதற்த உரிமைப்பேறளித்து இந்திய மக்களை உய்விக்கச்சென்றார் அண்ணல் காந்தியடிகள் ஆயிரக்கணக்கான தேசபக்தர்கள் தியாக வேள்வியில் குதித்து நாட்டைப்பண்படுத்துமாறு உயிரையும் உடலையும் திரணமாக கொடுத்தனர். பூரண உரிமையும் கிடைத்தது. புனிதம் அடைந்தார்கள் இந்தியர்கள் என, உலக மக்களெல்லாம் வியந்தார்கள். 5 வருடங்களும் சென்றன.

புத்தாண்டு பிறந்துவிட்டது; புது உலகம் பூத்துவிட்டது; மக்கள் பூரித்து வாழ்வார் என்ற எண்ணம் இயற்கையாகவே நம் உள்ளத்தை ஈர்த்து நிற்கின்றது. ஆனால் அவ்வெண்ணம் ஈடேறுவதற்கான சூழ்நிலை எப்படி இருக்கிறதென்று பார்ப்போம். கண்டிரோலை வேண்டாமென்று எடுத்துவிட்ட பிரதேசமும் கண்டிரோலை அகற்றிவிட்டால் நிலைமை என்னாகுமோ என்று மற்றொரு பிரதேசமும் ஒன்றையொன்று உருள உருள விழிக்கின்றன. தொழில் பெருக்கம் அணைத்திட்டம், மின்சார உற்பத்தி, போக்குவரவு வசதி ஆகியவைகளில் ஐந்தாண்டுத் திட்டம் அங்கங்கே ஆரம்பமாகி அந்நிய நாட்டார்களின் தயவில் உருவாகி வருகின்றது. இதனால் பெரும் மூலதனம் நாட்டின் பிடரியைப்பிடித்து பெரும்பளுவைச்சுமக்கச்செய்து வருகின்றது. இதனூடே அன்னையின் கோபமோ அல்லது ஆரிட்ட சாபமோ நாட்டிலோர் பகுதி வறட்சியால் பஞ்சமும் பட்டினியும், வேறொரு பகுதி வெள்ளப் பெருக்கால் அழிவும் சிதைவும், மற்றொரு பகுதி கொடுங்காற்றால் உயிர் நாசமும் பொருட்சேதமும் சம்பவித்து வாழும் மக்களை வாழவொட்டாதாக்கிவிட்டன. இத்துடன் நிற்கின்றதா? வீரவாழ்வு வாழ்வதற்குப் பதிலாக, உலகிற்கு உதாரணமாக வாழ்ந்து காட்டுவதற்குப் பதிலாக, உலகம் சிரிப்பதற்கும், எள்ளிநகைப்பதற்குமாக நாட்டில் உட்பகை வளர்வதற்கேதுவாக வடநாடு, தென்னாடு, வடமொழி, தென்மொழி நீவேறு நான்வேறு, என்னது உன்னது, நீ என்ன, நானென்ன என்ற மொழிப் பிரிவு, மாகாணப்பிரிவு, சாதிப்பிரிவு, சமயப்பிரிவு என்ற பழை ஜஸ்டிஸ் கால ஐயனார்களாய் வாழத் தெரியாத கோழைகள்போன்று கோமாளிக்கூத்தாட இறங்கிவிட்டார்கள். இறங்கியதால் என்ன நேர்ந்தது? தேசபக்தரின் உயிர் தவக்கனலில் பலியாயிற்றுதேசத்துக்குச்சொந்தமான சொத்துக்கள் தீக்கிரையாயின. ஒன்றுபட்டுவாழவேண்டியமக்கள் ஒருவரையொருவர் இனி வாழவொட்டாது சண்டித்தனத்திலிறங்கி மாய்த்துக் கொள்வார்களோ என்ற அச்சம் ஏற்பட்டு செயல்மறக்கச் செய்வதை பெருமக்கள் இனியாவது உண்மை நிலை தெரிந்து உய்வார்களா அல்லது உலகம் சிரிக்கச் செய்வார்களா என்று எவரால் ஊகிக்கமுடியும்?

எனினும் இனி ஒரு மாற்றமும் ஏற்றமும் இல்லாது போகாவென்று நாம் நம்புவோமாக. இருளில் ஒளி பிறப்பதுபோன்று சூறாவளி அடங்கி சுபிட்சமான அமைதி ஏற்படுவது உலக இயல்பாதலின், நாடெங்கும் நலமும் குணமும் நனிசிறந்து விளங்கச் செய்யவேண்டுமாய் புது ஆண்டு புதுப்பிக்கவரும் அருணன் கழலடிகளுக்கு வணக்கம் செலுத்துவோமாக.

கண் கலங்கும் கைத்தறி மக்கள்.

கைத்தறியை நம்பிவாழும்மக்கள் இலட்சோப இலட்சம். கைத்தறி ஒரு அழகான கைத்தொழில். வள்ளுவர் வாழ்ந்து காட்டியதொழில். காந்தியடிகள் மக்களைக் கடைப்பிடிக்குமாறு அருளிய தொழில். ஆணும் பெண்ணும் கூடி அமைதி நிலவ அறவாழ்க்கை நடத்துவதற்கு பொருத்தமான பொன்போன்ற தொழில். இத்தொழிலை ஒருகாலத்தில் ஒருசாரார் தான் கடைப்பிடித்திருந்தார்கள். நாட்டின் பற்பல பகுதிகளிலும் அதனைக் கையாண்ட அம்மக்கள் நிம்மதியாகவும் நிர்மலமாகவும் வாழ்ந்தார்கள். நீதியும் நேர்மையும் அவர்களிடம் பொலிந்துவிளங்கின. போதுமென்ற மனமே பொன்செய்யும் மருந்து என்பதை அறிந்துகொண்டவர்கள போல் உள்ளதை வைத்து உரிமை பாராட்டி எளிய வாழ்வு நடாத்தி உவகையோடு அக்காலத்தில் வாழ்ந்தனர்.

இக்காலத்திலோ எல்லோருக்கும் அதுஏற்ற தொழிலாகிவிட்டது. ஆனால் காலத்திற்கேற்றவாறு அது கைமாறு அளிப்பதற்கு மறுத்து வருகிறது காலகண்டர்களாகிய வியாபாரிகளும், மாரீசன்வேஷம் கட்டுகின்ற முதலாளிமார்களும் அதில் புகுந்துவிட்டார்கள. புண்ணிய கால தீர்த்தத்திற்காகப் புறப்பட்டுச்செல்லும் யாத்ரீகர்களின் கூட்டத்தில் கொள்ளைக்காரக் கும்பல்கள் புகுந்து சூறையாடிக்கொண்டு போவதுபோல் அமிதலாபத்தையே ராம நாமமாக ஜெபித்துக்கொண்டிருக்கும் முதலாளி வர்க்கம் வர்த்தகத்துறையில் நின்று இந்த ஏழைகளின் தொழிலை வம்பும தும்புமாக ஆக்கி பாடுபட்டவன் வாயிலும் வயிற்றிலும் மண் விழுந்துபோகச் செய்துவிட்டார்கள.

பாவம், ஏழைத் தறிகாரனுக்கு என்ன தெரியும் விடிந்தால் தறிக்குழியில இறங்கிபொழுது புலருமட்டும் பள்ளுப்பாடி பாடுபடுவான். பாடுபட்டக்கூலியை அரையும் குறையுமாக இருட்டியபின் வாங்கிவந்து குடித்தனத்திற்கு ஆச்சு என்று கொண்டுசேர்ப்பான். பஞ்சுபடாதபாடு என்பது அவனுக்குத்தான் தெரியும்.

பட்டு மெத்தையும், தங்கக்கிண்ணமும், பாலும் பழரசமும் அவன் வருகைக்காகவா காத்து இருக்கின்றது? கம்பங்கழி, சோழங்காடி கம்புக்கிழங்கு, கஞ்சித்தண்ணீர் இவற்றில் ஏதாவதொன்றை வயற்றில் தள்ளிவிட்டு மறுபடியும் வேலையில் பிரவேசிக்கின்றான். தினமும் வேலை, தினமும் கூலிக்குக் கூப்பாடு, தினமும் கஞ்சிக்குத்தாளம் என்பதுதான் இக்காலத்தில் அவன் அனுபவிப்பது. லட்சக்கணக்கான குடும்பங்கள் இந்தவிதிகெட்டவாழ்வில் வாடித் தவிக்கின்றது. இவர்களின் வாழ்வுக்கு உலை வைத்தது யார்? இவர்களின் தலையில் கைவைப்பதற்கு என்ன செய்தார்கள்? என்பனபோன்ற விஷயங்கள் புதிர்போலிருக்கின்றன.

என்றாலும் பஞ்சுமார்க்கெட், நூல்மார்க்கெட் ஏற்றுமதி இறக்குமதி பேரங்கள, டாலர் வசதிகள் என்று என்னவெல்லாமோ சொல்லி அரசாங்கத்திலுள்ள பொருளாதார அறிவாளிகள் பொதுமக்களை மழுப்பிவிடுகின்றார்கள். தறிகாரர்களுக்கு இதனை அறிந்து ஆகவேண்டியது என்ன? அவர்களின் ஒரே பிரச்சினை கூலி ஒன்றுதான். செய்த வேலைக்கு உடன் கூலி வேண்டும். கூலியை வைத்து குடித்தனம் பேணவேண்டும் என்பதுமட்டுமே இதனை அவர்களிடம கேட்டால் கூலி இல்லை அதுவும் கைக்கு உடன் கிடைப்பதில்லை என்று கூறுகிறார்கள். கூலிவேலையும் தினமும் செய்வதற்கு என்ன உத்திரவாதம் இருக்கின்றது என்று முறையிடுகிறார்கள்,

தொழிலுக்கு பாதுகாப்பு இல்லாமலும் வேறு தொழிலுக்கு வழியில்லாமலும் கைத்தறி மக்களான உத்தம வாழ்க்கை நடத்திய அந்த ஏழைத் தொழிலாளர்களில் பெரும்பகுதிப்பேர்கள பிழைப்பே இல்லாமல் இரந்து உண்பதற்கு இடம் பெயர்ந்துவிட்டார்கள். பிச்சைக்காரர்களின் கூட்டத்தில், கந்தைத் துணியின் கோலத்தில் உயர்ந்த நெய்த்துக்காரர்களில் பலர் ஊர் ஊராய்க் காணப்படுகின்றனர். அவர்களது வாழ்க்கை இந்த அலங்கோலத்திற்கு இடமளித்துவிட்டது.

எப்படி இவர்களைக் காப்பாற்றுவதுஎன்பது ஒரு பேரிய பிரச்சினையாகி உத்தமமான அரசியல்வாதிகளின் உள்ளத்தை உறுத்திக்கொண்டிருக்கிறது மில்த் தொழிலைக் கட்டுப்படுத்தி கைத்தறிக்கு சலுகை அளிப்பது என்பது ஒரு வழிதான். ஆனால் எல்லாம் அதனால் ஆகிவிடுமா? மில்த்தொழிலிலுள்ள மினுக்கு வேலையில் மக்கள் மதிமயங்கிக்கிடக்கிறார்களே அவர்கள் மயக்கம் தெளிவதற்கு ஏதாவது செய்ய வேண்டாமா? அத்துடன் மில் முதலாளிகள் மாயவித்தைக்காரர்களல்லவா? அவர்கள் தங்கள் வித்தையை வேறுவிதமாகத் திருப்பிவிட்டால் என்செய்வது?

மக்களின் மனம் மாறுவதற்கு, அவர்கள் கைத்தறி சரக்கில் ஆர்வம்கொள்வதற்கு கைத்தறிகாரர்களும் தங்கள் போலித்திறமைகளை எல்லாம் கடை கட்டிவிட்டு, உண்மையான உயர்ந்த ரகங்களை உற்பத்திசெய்து மார்க்கட்டில் விடவேண்டும். கைத்தறி வியாபாரிகளும் குறைந்த இலாபத்திற்கு கொடுப்பதற்கு முன் வரவேண்டும். தனி நபர்களின் தறிகளை முறியடித்துவிடாது, கூட்டுறவுத் தறிகளில் கையா

எப்படும் கூலிகளையும் முறைகளையும் எங்கும் முறைப்படி நடப்பில்வர முயலவேண்டும். அரசாங்கமும் மில் முதலாளிகள் அவ்வப்போது அடித்துவிடத்தகுட்டபல்டிகளிலும் கர்ணங்களிலும் சதா கண்காணித்து வரவேண்டும். அவ்வாறிருந்தால் மட்டுமே நமது ராஜாஜியின் திட்டத்திற்கும் திடசங்கல்பத்திற்கும் கௌரவம் ஏற்பட்டு மக்கள் ஓரளவில் கடைத்தேறுவதற்கு இடமாகும்.

இன்னும் தேவையா?

ஜவுளிமார்க்கட் குப்புறச் சரிந்து கிடக்கிறது. குவிந்துகிடக்கும் துணிமணிகளை வாங்குவாரில்லை. பொதுமக்களின் வருமானக்குறைவினால் அவர்களுக்குப் போதிய தேவையிருந்தும் துணிமணிகளை வாங்குவதற்கு வழியின்றி மக்கள் மிரளமிரள விழிக்கின்றார்கள். வியாபாரிகளோ தங்கள் கையிருப்பு சரக்கு வெளியேறுவதற்கு வழியில்லாமலும் குறைந்தவிலை சரக்கை வாங்குவதற்கு மூலதனமில்லாமலும் பரக்கப்பரக்க விழித்து தினமும் நஷ்டமடைந்து கொண்டுவருகிறார்கள். இந்த நிலைமையில் அரசாங்கம் இன்னும் துணி கண்டிரோலை முற்றும் எடுத்துவிடுவதற்கு துணிச்சலில்லாமல் சில ரகங்களுக்கு அதாவது ஷர்ட்டிங், லாங்கிளாத் ஷீட்டிங் முதலானவைகளுக்கு இட்டுவைத்திருந்த விலங்குகளையும் எடுப்பதற்கு மனமில்லாமல் புதுவருடத்தில் மூன்று மாதங்கள்வரை நீட்டியிருக்கிறது.

சென்ற அக்டோபர் மாதத்தில் அரசாங்கம் மில் ஜவுளி ரகங்களான வேஷ்டிகள், ஸாரிகள், மல் தினுசுகள், கிரேப், பாப்ளின், வாயில், டிறில் முதலான ரகங்களுக்கு இடப்பெற்றிருந்த கட்டுப்பாடு விலைகளை நீக்கியது. நீக்கப்பெற்றும் மார்க்கட்டில் ஏராளமான துணிகள் விற்பனையின்றி தேங்கிக்கிடக்கின்றன. இதற்கு காரணம் விலையிலும் ரகங்களிலும் ஜனங்களுக்கு மோகம் இல்லை என்பதன்று. மக்களின் வறுமையே பிரதான காரணமாகும். வருமானமில்லாமலும் தொழில் இல்லாமலும் மக்கள் எங்கணும் வருந்தித் தவிக்கின்றார்கள். கைப்பொருள் இல்லாக் குறையினால் தேவைப்படும் சரக்குகள் கிடைப்பதற்கு வழியிருந்தும் வாங்குவதற்கு அவர்களிடம் வழிபிறக்கவில்லை. இந்த நிலைமையில் அரசாங்கம் இன்னும் ஜவுளிக கட்டுப்பாட்டை அறவே ஒழித்துக்கட்டுவதற்கு மனமில்லாமல் இரண்டொரு சாதாரண தினுசுகளுக்கு அதாவது மாணவர்கள், ஆபீஸ் உத்தியோகஸ்தர்கள் சாதாரணப் பேர்வழிகள் விரும்புகின்ற ஷர்ட்டிங் தினுசுகளின் கட்டுப்பாடு விலையை எடுப்பதற்கு துணிவு கொள்ளாமலிருப்பது ஆச்சரியமாகயிருக்கிறது. அடைமழை நின்றும் தூவானம் நிற்கவில்லை என்பார்கள். இன்னும் பிடியை விடக்கூடாது என்ற நிலையில் அரசாங்கம் அரைகுறை வேஷத்தை விடமனமில்லாமல் திரும்பவும் அரைகுறை கட்டுப்பாடு என்று 'சப்ளையும் தேவையும் சரியான நிலையில்லாமலிருப்பதால் கண்டிரோலைப் பூராவும் எடுக்க முடியவில்லை'' எனக் காரணம் காட்டுகின்றது.

ஆனால் அரசாங்கம் விதித்துள்ள கட்டுப்பாடு விலைகள் அந்த ரகங்களில் அப்படியே இருக்குமானால் அவைகளின் ''சப்ளை'' எந்த விதத்தில் அதிகமாகும், அல்லது எவ்வளவு காலத்தில் அதிகமாகும் என்பதற்கு என்ன உத்திரவாதம் உளது? விலைவாசியில் மாற்றம் இல்லையாயின் அல்லது மக்களுக்கு வசீகரம் ஏற்படாது போகுமாயின் மில் முதலாளிகள் அந்த ரகங்களை எதற்காக அதிகப்படியான சப்ளை செய்ய முயலப்போகிறார்கள்? வேஷ்டி ரகங்கள் ஸாரி தினுசுகள், பாப்ளின் மல் ரகங்கள் முதலியன கட்டுப்பாடு நீங்கியதின் விளைவாக விலைவாசிகள் கூடவோ அல்லது கிடைப்பதற்கு அருந்தலோ இல்லை என்பது எல்லோர்க்கும் விளங்கும். எனவே இவைபோன்று எல்லா மில்ரகங்களுக்கும் ஒரேயடியாக கட்டுப்பாட்டை நீக்குவதற்கு அரசாங்கம் முன் வந்திருந்தால் அதன விவேகத்தை எல்லோரும் பாராட்டக்கூடும்.

எனது தீர்மானம்.

நான், ஒரு தமிழன். "தொழில் முரசு" தொழில் வளர்க்கும் ஒரு தனிப் பத்திரிகை என்பதை **ஒப்புக்கொள்ளுகிறேன்.**

நான், தமிழர்களுக்கு தொழிலில் ஆர்வத்தையும் ஆகர்ஷணத்தையும் "தொழில் முரசு" ஊட்டுகிறதென்பதை **நம்புகிறேன்.**

நான் "தொழில் முரசை" எனது தோழனாகவும், உற்ற துணைவனாகவும் **அங்கீகரிக்கிறேன்.**

நான், "தொழில் முரசு" எனக்கு வழிகாட்டியாகவும், வாழ்க்கைத் துணையாகவும் இருப்பதற்காக **நன்றி செலுத்துகிறேன்.**

அதன் பிறப்பிடம்.... ....நாகர்கோவில்

கோவை நகரம் கொடுத்துதவிய விஞ்ஞான வள்ளல்.

தாயின் கையில் வளராத குழந்தை, பள்ளிக்குச் செல்லாத பாலகன், ஊருக்கு ஆகாத உதவாக்கரை, ஆருக்கும் அடங்காத படுசுட்டி என்றெல்லாம் துள்ளித் திரிந்த காலத்தில் துரைசுவாமியைச் சொல்லிக்கொள்ளுவார்களாம். வாலைப்பருவம் சென்றது; காளைப்பருவமும்கடந்தது. தான் பிறந்து வளர்ந்த கலங்கல் கிராமத்தில் 20 வருடங்களும்சென்று விட்டன.

கோபாலசுவாமி நாயுடுவின் புதல்வனை துரைசுவாமி நாயுடு தனது கிராமத்தை விட்டு கோவைக்குச் சென்றான். அங்கு ஹோட்டலில் மூன்று ரூபாய் சம்பளத்தில் மூன்று வருடம் போக்கினான். கையில் எப்படியோ 400 ரூ. சிக்கியது. இதனை வைத்து ஒரு வெள்ளையரின் தயவால், தனதுமனதில் ஒரே ஆசையாக இருந்து வந்த ஒரு மோட்டார் சைக்கிளை வாங்கி, அதை ஓட்டுவதோடு திருப்தி அடையாமல் அதனைப் பிரிப்பதும், பூட்டுவதும், கழற்றுவதும் சுழற்றுவதுமாக அதன் வேலைப்பாடுகளைத் தானாக கற்றுக்கொண்டான். கற்றும்முதலில் ஒருமெக்கானிக்காக இருக்க மனமில்லாமல், பருத்தி வியாபாரத்தில் ஆசைப்பட்டு இறங்கி, சிறிது நாளில் கையிலிருந்த சிறுமுதலும் சிதறிப்போக நேரிட்டது.

பின்னர் கோவையை அடுத்த சிங்காநல்லூரில் மாதம் 12 ரூபாய் சம்பளத்தில் ஒரு ஜின்னிங் பாக்டரியில் வேலை பார்த்தார் துரைசுவாமி நாயுடு. இதிலும் அதிக நாள் செல்ல விடாமல் சொந்தத்தில் ஒரு ஜின்னிங் தொழிலை ஆரம்பிக்க திருப்பூர் வந்து சிறிய மூலதனத்தில் ஸ்தாபனத்தை நிறுவி விட்டார். அப்பொழுது முதலாவது உலக மகாயுத்தம் முடிவடைந்த காலமாதலால் அந்தத் தொழில் செழித்து வளர்ந்து 1½ லட்ச ரூபாய் ஊதியத்தை அவருக்கு அளித்தது. உடனேயே கோயம்பத்தூரில் லட்சாதிபதி ஜாபிதாவில் அவருடைய பெயரும் வந்துவிட்டது.

பஞ்சு வர்த்தகம் பின்னர் அவரை பம்பாய்க்கு இழுத்தது. பஞ்சுத் தரகர்கள் முன்னால் ஒன்றரை வருடகாலம் இருந்தார். கையிலிருந்த 1½ லட்ச ரூபாயும் பஞ்சாய்ப் பறந்துவிட்டன. வெறுங்கையோடு ஊருக்குத் திரும்பினார். தொழில் அறவே இல்லை; பணமும் கையில் இல்லை; பின் யார் மதிப்பார்கள்? எங்கேயாவது மீண்டும் சம்பளத்திற்குத் தான் செல்ல வேண்டும். புதல்வனின் தோல்வியை நினைத்த தந்தை கலங்கல் கிராமத்து வீட்டுக்கு அழைத்தார். அங்கு செல்வதற்கு துரைசுவாமியின் மனம் எப்படி ஒப்பும்? செல்லவேயில்லை. திடீரென்று ஒரு யோசனை தோன்றிற்று. கோயம்பத்தூரில் அப்போதிருந்த ராபர்ட் ஸ்டேன்ஸ் என்ற ஐரோப்பிய வர்த்தகரிடம் மெக்கானிக்கல் வேலை ஒன்று கோரினார். அவர் அதற்கு இணங்காது ஒரு மோட்டாரை வைத்து நடத்தும்படி ஏவி 4000 ரூபாய் முன்பணம் கொடுத்து உதவினார்.

துரைசுவாமி நாயுடு அதனைப் பெரிதாகக் கருதி தனது சுய முயற்சியால் ஒரு மோட்டாரையும் வாங்கி பழனி—பொள்ளாச்சி ரோட்டில் முதல்பிரயாணி மோட்டாராக அவரே ஓட்டினார். துரைசுவாமி நாயுடு அந்த ஒரு மோட்டாரின் சொந்தக்காரர் அப்பொழுது. இன்று கோயம்பத்தூரில் 200க்கு அதிகமான கார்களும் 1000 பேர்களுக்கு அதிகமான வேலையாட்களுமுடைய மோட்டார் மன்னனாக விளங்குகிறார். மட்டுமா, தென்னிந்தியாவிலேயே ஒரு தனி மேதாவியாக பரிணமிக்கின்றார். அது மட்டுமா இயந்திரத் தொழில் விஞ்ஞானியாக காட்சியளிக்கின்றார். அத்துடன் அவர் ஒரு சிற்பச் செல்வர்; சிந்தனையாளர், விவசாய நிபுணர்; தொழிற்கலை வியாபகர்; உண்மையில் அவர் பொதுஜனப் பிரமுகர்; பொதுஜனப் பிரியர்; பொதுஜன உபகாரி வாழ்நாள் முழுவதும் தொழில் வளர்த்து அதன் வருமானத்தை தொழில் செய்யும் மக்களுக்காகவும் ஏழை மாணவர்களுக்காகவும் வாரி இறைக்கும் வள்ளல்பெருமான்.

ஸ்ரீ G. D. நாயுடு அவர்கள் சிறுவயது முதலே “மது, மாமி

சம், மாது" ஆகிய மூன்று விஷயங்களிலும் மனதை இழந்துவிடாத உத்தம நெறியாளர். உலகம் முழுவதிலும் சுற்றுப்பிரயாணம் செய்த காலத்திலும், மகாத்மாகாந்தி கடைப்பிடித்தொழுகிய அதே புலனடக்கத்தில் புனிதத்துவம் காத்து வந்த புண்ணியன் என்று உலகோர் போற்றும்விதம் நடந்துகொண்டார்.

இயந்திரசகாப்தத்திலே மனித வர்க்கத்தின் முன்னேற்றத்திற்கு இயந்திர சாதனங்களின் வாயிலாக எவ்விதமான ஊழியம் செய்யலாம் என்பதுதான் ஸ்ரீ நாயுடு அவர்களின் சதா சிந்தனையாகும். அவர்களின் உள்ளக் கிடக்கைக்கு ஒப்ப இரவுபகலாய் அதி நுட்பமான இயந்திர கருவிகளை தானுகவே கண்டுபிடிப்பதில் தனது முழுத்திறமையையும் அபார அறிவையும் உபயோகித்தார். அவருடைய சாதனைகள் இயந்திர உலகையே வியக்குமாறு செய்தன.

ஸ்ரீ நாயுடு அவர்களின் இயந்திரக் கண்காட்சிசாலை மிகவும் அற்புதமானது. 350 அடி நீளமும் 70 அடி அகலமும்கொண்டது. எதிரொலி கிடையாதது; தன்னிழல் தெரியாதது; காற்றும் ஒளியும் கவர்ச்சிகரமுடையது; அதன்சிற்பத்திறனும்ஸ்ரீD.நாயுடு அவர்களுடையதே.அந்த அழகிய கட்டிடத்தினுள் 25 லட்ச ரூபாய் பெறுமதிப்புள்ள விமான என்ஜின்கள் ரோல்ஸ்ராய்ஸ் மோட்டார் என்ஜின்கள் "டு ஆல்" ("Do All") மெஷின்கள், ஆகிய பலரக அமெரிக்க ஜெர்மன் இயந்திர சாதனங்கள் கழற்றி மக்களுக்கு கற்பிக்கும்பொருட்டு அங்கு வைக்கப்பட்டிருக்கின்றன. இவைகளின் மத்தியில் நாயுடு அவர்கள் சொந்தமாகக்கண்டுபிடித்த, மாக்ரோ பிளக்ஸ் டெஸ்ட்டிங் யூனிட் (Magro Plux Testing Unit) என்ற கருவி, ஆட்டோ ஸிலின்டர் ரீபோரிங்மெஷீன், யூ-எம் எஸ் ரேடியோ, ரேஸன்ட்பிளேட் ஒரு அவுன்ஸ் பெட்ரோலில் ஓடும் பொம்மை மோட்டார்,கூட்டல் கணக்குப்போடும் இயந்திரம் மோட்டார் அதிர்ச்சியை சோதிக்கும் இயந்திரம், காசைப் போட்டவுடன் பாடும் இயந்திரம் ஆகிய 80 விதமான அற்புத தயாரிப்புகளைச் செய்து அங்கு வைத்திருக்கிறுர்கள். இவைகளைக் கண்ணுற்ற ஸர். ஸி. வி. ராமன் போன்ற விஞ்ஞானிகள், மேல் நாட்டு ஐரோப்பிய மெக்கானிக்கல் இன்ஜினியர்கள் அனைவரும் வியந்து வியந்து மயங்கிப்போயினர்.

> ## முகப்புப்படம்.
>
> நமது புத்தாண்டு இதழாக வெளிவந்துள்ள தொழில்முரசின் முகப்பை கோவை வாழும் தென்னிந்தியத் தொழிலரசு ஸ்ரீ G. D. நாயுடு அவர்களின் சித்திரம் அலங்கரிக்கின்றது. வாழ்க! தொழில்வள்ளல்.

ஸ்ரீ நாயுடு கண்டுபிடித்த பொருள்கள் மதிப்பற்றவை. ஜெர்மன் லீப்ஸி சந்தையில் பரிசு பெற்றவை. இந்தியர்களின் உதவியற்ற தனித்திறமையை எடுத்துக்காட்டுபவை. அதனுலேயே ஐம்பது ரூபாயில் ரேடியோ செய்து தருகிறேன். 500 ரூபாயில் மோட்டார் செய்து தருகிறேன் என்று அரசாங்கத்திற்கே சவால் விடுக்கின்றுர் வித்தகச் செல்வரான ஸ்ரீ நாயுடு.

ஆனுல் உண்மையான ஊழியத்தை நிர்மலமான உள்ளத்தை உரிமை பாராட்டும் தேசச் சேவையை, எளிய வாழ்வு மேற்கொண்டொழுகும் மேதாவித்தனத்தை, தியாகத்தை, தவத்தை மேற்கொண்டொழுகுகின்ற உத்தமசீலர்களை, இந்திய மக்கள் எந்த நாள் பூரணத்துவமாக அறிந்தும் உணர்ந்தும், பாராட்டியும், பாதுகாத்தும் பெருமைப்பட்டனர்? "இந்தியப் பிதாவின்" உயிரையே கவர்ந்து கொள்வதற்கு இந்தியர்களில் சிலர் இருந்தார்களே, என்று இந்தியச்சரித்திரம் எழுத நேர்ந்துவிட்டதென்றுல், இந்த நாட்டில் வேறு எந்த மேதைக்கு எந்த தியாகிக்குப் பெருமையும் பாராட்டுதலும் இருக்க முடியும்?

ஸ்ரீ நாயுடு அவர்கள் தென்னிந்தியாவின் தொழில்த் துறையில் திலகமாக விளங்குகின்றவர். விஞ்ஞானத்துறையில் ஞானஒளியாகத் திகழ்கின்றவர். அவர்களது சேவை இந்தியாவுக்கும் இந்திய மக்களுக்கும் கிடைத்தற்கரிய பொக்கிஷமாகும். அதில் மக்கள் பங்குபெற்று பலன்பெறும் காலம் இன்னும் வரவில்லையே!

> ## மூன்று பிரதிக்ஞை
>
> ...o0o...
>
> தொழில் இல்லாமல் கெட்டுப் போனதற்கு நேர்ந்த விபரீத சந்தர்ப்பங்களே.
>
> **மறந்துவிடு**
>
> தொழில் கொடுத்து உதவும் துறைகளை எடுத்துக்கூறும் பத்திரிகையைத் **தேடிப்பார்**
>
> தொழில்முரசை வாங்கி கவமாக வாசித்து அது தரும் வழிகளை **ஆராய்ந்துசொல்**

ரொட்டியும் வெண்ணையும்

★ ஜன்ம சத்துருக்கள். ★

பாலும் பழமும், தேனும் தினையும், மோரும் சம்மந்தியும் என்று நாம் சேர்த்து வைத்து உறவு கொண்டாடுவது சகஜம். இதே போல்த்தான் மேல்நாட்டார்களும், அவர்களைப் பின்பற்றும் நம்மவர்களுங் கூட உணவு ரகங்களில் ரொட்டியும் வெண்ணையும் என்று சம்பந்த உறவுகொண்டாடி உட்கொள்ளுவது வழக்கம். இப்பொழுது இந்த உறவுக்கு ஹானி ஏற்பட்டு ஒன்றையொன்று மிரள மிரள விழிக்கின்றன. ரொட்டியில் வெண்ணை புரண்டதும், வெண்ணையில் ரொட்டிஉருண்டதும் இனியுள்ள காலத்திற்கு நடவாது போல்த் தோன்றுகிறது. பாவம் அவைகள் ஒன்றுக்கொன்று தங்கள் சம்பந்தங்களை ரத்து செய்து விலகிக்கொள்ள வேண்டியதுதான் என்று விவாதிக்கின்றார் டானியல் ஸி. மன்ரோ என்ற பேரறிஞர். அவர் கூறுவதாவது:-

உங்கள் ஜீரண சக்தியின் ரசாயன முறையை நாம் சற்று கவனித்துப்பார்ப்போம் உங்களுக்கு இரண்டு பிரத்தியட்சகாமான ஜீரண முறைகள் உங்கள் குடல்களில் இருந்து வருகின்றன. புரோத சக்தி (Proteins) மிகுந்த மாமிசம், மீன், முட்டை, பால் கட்டி முதலியவைகளுக்காக புளிரச ஜீரணமும் (Acid digestion) சர்க்கரை மாவுப் பதார்த்தங்களான (Sugar & starch) காய்கறி கிழங்கு வகைகளுக்காக உப்புரச ஜீரணமும் (Alkaline digestion) இரண்டு தனித்தனி முறைகளென்பதுதான் அவைகள்.

சடதத்துவ நிபுணர்கள் அனைவரும் புரோத சக்தி உணவுகள் குடலில் காஸ்டிறிக் ஜூஸ் எனப்படும் புளிரசத்தாலேயே ஜீரணமாகிறதென்பதை ஒப்புக்கொள்ளுகிறார்கள். குடலிலும் எந்த வேளையிலும் புளிரசம் உற்பத்தியாகிக்கொண்டிருக்கிறது.

காய்கறி கிழங்கு பதார்த்த உணவுகள் பெரும்பான்மையும் சிறுகுடல்களில் "பான்கிரீஸ்" ரசம் எனப்படும் ஒருவகை நீர் சத்து உற்பத்தியாகி அதன் வழியாகவே ஜீரணமாகின்றன. இது உப்புரசமுடையது பசை மிகுந்த மாவு பதார்த்தங்களுக்கு இந்த உப்புரசம்தான் ஜீரண சக்தியை அளிக்கின்றது. காய்கறி பதார்த்தங்கள் குடலில் ஏற்கனவே உற்பத்தியாகின்ற ஹைட்ரோகுளோறிக் புளிரசத்தை உற்பத்தியாகவிடாமல் தடை செய்தும், ஏற்கனவே இருப்பதை தன்னோடு இழுத்தும் செல்வதால் புரோத சக்தி மிகுந்த மாமிச உணவுகளை ஜீரணிக்கச் செய்வதில் போதிய இடம் கொடுக்காமல் ண்ட கால அவகாசத்தையும் அளிக்கின்றது.

எனவே இதிலிருந்து என்ன தெளிவாகின்றதென்றால் இந்த இரண்டு ஜீரண சக்தி முறைகளும் வெவ்வேறானது. ஒன்றுக்கொன்று முரணுவது. ஒன்றோடொன்று பொருந்தாதது.

புரோதம் கொழுப்பு மிகுந்த பதார்த்தங்கள் நேராக பெருங்குடலில் சென்று சிறுகுடலுக்கு மாறுகின்றன. அங்கு அவை புளிரசத்தோடு கலக்கையில் உப்புரஸத்தோடும் சேர்வதற்கு இடமாகின்றது. காய்கறி பதார்த்தங்கள் இந்த நெருக்கடியில் இலகுவாக ஜீரணிப்பதற்கும் இடமாவதில்லை.

எனவே நாம் இப்பொழுது பிரகடனப்படுத்த வேண்டும் சட்டம் என்னவெனில் வெண்ணை பாலேடு முதலியவற்றோடு பசை மிகுந்த பதார்த்தமான உருளைக் கிழங்கு, ரொட்டி, சர்க்கரைப் பதார்த்தங்கள் முதலியவற்றை ஒரே நேரத்து உணவாக கலந்து விடாதே என்பதுதான்.

ஆதலால் காய்கறி உணவோடு மாமிச உணவையும் கலந்து விடாதே. மாமிச உணவானால் காய்கறி உணவு சேர்தல் கூடாது. மிகவும் எளியதான உணவுப்பிரச்சினைதான் இது. ஆனால் நாம் இதுகாறும் கைக்கொண்டு வந்த பழக்கத்திற்கு முற்றிலும் மாறானது. இனி மாற்றி ஆகவேண்டுமென்றால் உங்களுக்கு இடஞ்சலாகத்தானிருக்கும். ஆனால் என் செய்வது? வெட்ட வெளிச்சம்போல் நிரூபணமாகிவிட்டால் வேறு வழியேது?

உங்கள் ஆகாரத்தில் முட்டை வெண்ணை கலப்பிருந்தால் ரொட்டி இருத்தல் கூடாது. உங்கள் ஆகாரத்தில் உருளைக்கிழங்கு, மிட்டாய் தினுசுகள், பாயாச வகைகள் இருந்தால் வெண்ணை பாலேடு ஒன்றும் இருத்தலாகாது. இது தலைகீழ் மாற்றம் போல் தோன்றும். நமது பழக்கம் அத்தகைய நிலைமையைக் கொண்டு வந்துவிட்டது.

(11-ம் பக்கம் பார்க்க)

மோட்டார் ஓட்டும் தொழில்.

மோட்டார் ஓட்டுவதென்பது இக்காலத்தில் சர்வ சாதாரணமான ஒரு தொழிலாய் விட்டது. எல்லோரும் மோட்டார் ஓட்டுவதற்கு விரும்புகிறார்கள். பெரிய உத்தியோகஸ்தர்கள் பணக்காரர்கள், வயோதிகர்கள், வாலிபர்கள், பெண்கள் ஆகிய அனைவரும் மோட்டார் ஓட்டுவதில் ஆசைப்படுகிறார்களென்று சொல்லலாம்.

மோட்டார் ஓட்டப்படிப்பது ஒரு பெரிய விஷயமல்ல. சிறிது நாட்களில் அதனைக் கற்றுக்கொள்ளலாம். மோட்டாரை ஓட்டுவதும் இலகுதான். ஆனால் அந்தத் தொழிலை கையாடுவதற்கு முன் சில அரிய விஷயங்களை கற்றுக்கொள்ள வேண்டும். அதாவது மோட்டார் எப்படி ஓடுகின்றது என்று அறிவதல்ல. மோட்டாரை எப்படிச்செலுத்தவேண்டும் என்பதைத் தெரிந்திருக்கவேண்டும். மோட்டாரை ஓட்டுவதற்கு சட்டங்களையும் ஒழுங்குகளையும் அத்துடன் ஒழுக்க முறைகளையும் நன்கு படிக்கவேண்டும். அதன் பின்னர் மோட்டாரின் இயந்திர கருவிகளைப்பற்றி படித்தால் போதுமானது.

மோட்டார் ஓட்டுகின்ற உங்களுக்கும் உங்கள் பக்கத்தில் இருக்கின்றவர்களுக்கும், உங்களை யார் என்றுதெரிந்துகொள்ளும் ஏனைய எல்லோருக்கும் முன்பாக மோட்டார் ஓட்டும் தொழிலில் அறிய வேண்டியதான 'தொழில் முறை கண்டவாசகம்'' என்ற ஒரு நூல் இருக்கின்றது. அதனைச் செவ்வனே படித்து பழகி ஸர்டிபிக்கேற்றும்வாங்கியவர்கள் மட்டுமே மோட்டார் ஓட்டும் தொழிலைக் கையாடுவதற்கு லாயக்கு ஆனவர்கள்.

மோட்டார் ஓட்டுகின்றவர்களுக்கு ஒழுக்கம், மரியாதை விவேகம் ஆகியவை முதலில் இருக்கவேண்டும். இதற்கேற்ற கல்வியை அவர்கள் கற்றிருக்கவேண்டும். மோட்டாரைக் கையிலெடுக்கும் பொழுதே மனதிற்கும்மண்டைக்கும் தெளிவு ஏற்பட்டு பொறுப்பு உணர்ச்சி உண்டாக வேண்டும். மோட்டார் ஓட்டும் பொறுப்பு என்பது அறுடது குதிரைகளை ஏககாலத்தில் வைத்து ஓட்டுவது போன்றதாகும். முன்னும் பின்னும் இடதுபுறமும் வலதுபுறமும் குறுகிய ரோடுகள், சந்துகள் இவ்விடங்களையெல்லாம் நன்கு கவனித்து மிகுந்த பொறுப்புணர்ச்சியுடன் தொழிலை மேற்கொள்ளாவிட்டால் மோட்டார் சக்கரத்தில் என்ன நடக்கிறதென்று அறிய முடியாது. இத்தனை பொறுப்பும் உங்களிடம் இருக்கிறதென்பது யார் தீர்மானிப்பது? உங்கள் தாய் தந்தையர்களா? எஜமானர்களா? அரசாங்கத்தார்களா? எவருமில்லை நீங்கள் தான் தீர்மானித்துக்கொள்ளவேண்டும். இதற்கு கெட்டிக்காரத்தனம் ஒன்றும் கிடையாது. ஸர்டிபிக்கேற்றும் கிடையாது. உங்கள் தனிப் பொறுப்பை நீங்களே உணர்ந்துகொள்ள வேண்டும்.

சட்ட திட்டங்கள், போக்கு வரவு விதிகள், மோட்டார் லைசன்சுகள், குற்றத்தண்டனைகள் யாவும் உள்ளன. இருந்தும் நேர்மையான மனம் நிதானமான புத்தி, உயிரின் விலை உடலின் நிலை, மக்கள் மனோபாவம் இவற்றை சரிவர அறியாத எவரும் மோட்டாரை ஓட்டக்கூடாது. மோட்டார் ஓட்டும் தொழிலை கலாசாலைகளில் ஒரு பாடமாக வைத்து ஒழுக்கக் கல்வியோடு சேர்த்து மாணவர்களுக்கு போதித்துவரலாம். ஹைஸ்கூல் படிப்பில் இதனை ஒரு பாடமாக வைத்தால் கெட்டுப்போவது ஒன்றுமில்லை. வருடத்தில் ஹைஸ்கூல் படிப்பிற்காக 2000 மணிக்கூர் செலவு செய்யும் ஒரு மாணவன் மோட்டார் தொழிலை 28 மணிநேரத்தில் கற்றுக்கொள்ள முடியும். ஹைஸ்கூல் மாணவர்கள் பின்னால் மோட்டார் டிறைவர்களாக வெளி வருவார்களாயின் ரோடுகளில்நடந்து செல்லும் உங்கள் சிறு குழந்தைகளுக்கு ஆபத்து வராது. வயோதிகர்கள், குருடர்கள் செவிடர்கள், கவலை கொண்டு நடக்கும் ஏழைகள் எவர்க்கும் ஆபத்து நேரிடாது. இப்பொழுது நேர்ந்துவரும் பேராபத்துகள் நாளுக்கு நாள் குறைந்துவிடும். மக்களின் உயிரை தாங்கிச்செல்கிறோம். அவர்களின் உயிருக்குத் தாங்கள்தான் ஜவாப்தாரி என்ற உணர்ச்சி அவர்களுக்கு இயல்பாகவே வளர்ந்து ஊறிவிடும். இதற்கு வழி தேடுங்கள்; இது உங்கள் கைகளிலேயே இருக்கிறது. தினமும் மோட்டார் அபாயங்களிலகப்பட்டு ரோடுகளில் வழிந்தோடும் இரத்த வெள்ளத்தைத் தடுப்பதற்கு இது ஒரு சிறந்த வழி என்பதை இன்று முதலேனும் எண்ணிப்பாருங்கள்.

துருக்கியர் 150 வயது வரை வாழ்கின்றார்கள்.

துருக்கி தேசத்திலும் பால்க்கன் பிரதேசத்திலும் வசிக்கின்ற சுதேசிகள் 120 முதல் 150வயது வரை வாழ்வது சாதாரணமான ஒரு விஷயம். அவர்கள் உட்கொள்ளும் ஆகாரம் இதற்குக் காரணமாகும். அவர்களின் சர்வ சாதாரணமான ஆகாரம் புளித்த பால். புளிக்கவைத்த பாலை அவர்கள் அதிகப்படியாகவும் விருப்பமாகவும் அருந்துகிறார்கள் அங்கு பசுக்களிலிருந்து விவசாயி பால் கறந்தெடுத்ததும் புளித்த பாலுடன் அதனை உடன்தானே கலந்து விடுகிறான். அது முற்றிலும் புளித்துவிடுகின்றது. இதனையே அவர்கள் விருப்பமுடன் குடிக்கிறார்கள். மிகவும் அதிகமாகவும் குடிக்கிறார்கள். அது முற்றும் புளித்த பால்.

மனித சரீரம் நீண்ட ஆயுளை அடைவதற்கு அதிகப்படியான "கியால்ஸியம்"(சுண்ணும்புசத்து) சரீரத்தில் உபகாரப்படுவதற்கேற்றதாக வியாபிக்கவேண்டும். புளித்தபால் ஆஸிட் ஆகிவிடுவதால் கியால்ஸியத்தை வளர்த்து உபகாரப்படுத்துவதற்கு அது துணையாகயிருக்கிறது. புளித்த பால் நமது ஆகாரத்தில் விலை மதிக்கத் தகும் உயர்ந்த சத்துப்பொருளை அளிக்கின்றது. இதன்காரணமாகவே துருக்கியர் நீண்டகாலம் வாழ்ந்து வருகிறார்கள்.

(9-ம் பக்கத் தொடர்ச்சி)

ஆனால் ஆராய்ச்சியாளர்கள் நமக்காகப் பாடுபடுகின்றார்கள். நம்மைக் கெடுத்துவிடுவதற்காக அல்ல. பல புதிய உண்மைகளைக் கண்டு பிடித்து நமக்கு அளிக்கின்றார்கள். இன்னும் பல காலங்கள் செல்லும்போதுதான் இந்த உண்மைகளின் தனிப்பெருமைகள் விளங்கும். ஆனால் புத்திசாலிகளுக்கு இது உடன் புலனாகியும் விடும். நீங்களும் புத்திசாலித்தனமாக நடக்க வேண்டியவர்கள் தானே.

ஆதிகாலத்தில் மனிதர்கள் கொழுப்பு பதார்த்தங்களோடு காய்கறி வகைகளைத் திங்கவில்லை. அவன் கண்ட ஆகாரத்தை அப்படியே அதிகமதிகமாக உண்டு வந்தான். மாமிசமானால் மாமிசம். கிழங்கு வகையென்றால் கிழங்குகள். அவ்வளவுதான். அவன் அவற்றை ஒன்றோடொன்று சேர்த்துக்கொள்ளவில்லை. இப்பொழுது நாம் நாவின் ருசியறிந்து ஒன்றையொன்று சேர்த்துவிட்டோம். நமது பழக்கம் மாறிவிட்டது. பல துன்பங்களையும் கட்டி ஆளுகிறோம், அழுகிறோம்.

கொழுப்பு பதார்த்தங்களை மாமிசத்தோடு மீன், முட்டை, பாலேடு முதலியவற்றோடு அருந்துங்கள். இவை ஒன்றையொன்று சேர்ந்துகொள்ளும். கட்டாயம் இவை சேர்ந்துகொள்ளவும் வேண்டும். இவை அழகாகஒன்றுபட்டு இசைந்து ஜீரணிக்கின்றன. கொழுப்பு, புரோதம், புளிரசம் (Acid) மூன்றும் இசைந்து ஒன்றிற்கொன்று உதவியாயிருக்கின்றன இதனை மறந்துவிடாதீர்கள். மனதில் திடமாகக் கொள்ளுங்கள். கொழுப்புப் பதார்த்தங்கள் புரோத பதார்த்தங்கள், புளிரசங்கள் (Acids)

ஆனால் இதற்கு நேர்மாறான கதை, காய்கறி கிழங்கு சர்க்கரைப் பதார்த்தங்கள். இவை உப்பு ரஸத்தினாலேயே ஜீரணிக்கின்றன இதனால் நமக்கு இன்னொரு சட்டம் பிரகடனம் செய்வதற்கு நாம் தயாராகிவிட்டதை அறிய வேண்டும். புளிரச சக்தியோடு காய்கறி பதார்த்தங்களை இணைக்காதே. தயிர், ஆரஞ்சு, எலுமிச்சப்பழம் முதலியவற்றோடு காய்கறி வகைகளைச் சேர்க்காதே. ஆனால் இது புதிய சகாப்தம் போலும், நமது நெடுநாள் பழக்கத்தை கேலிக்கூத்து செய்வது போலுமிருக்கும். எப்படி இனி சாதிக்கும்? எல்லாவற்றையும் இனி மாற்றவேண்டி வருமே என்றுதான் தோன்றும்.

ஆரோக்கியமாக இருக்கின்றவர்கள் எல்லோருமே இக்காலத்தில் ஒவ்வாத உணவுகளை ஒன்றோடொன்று கலந்துதான் உண்கின்றார்கள் ஆனால் கேடு கேடுதான். கேடுவிளைந்துதான் ஆகும். ஜீரண சக்தியின்போது உங்கள் குடலில் ஒரு பெரும்போர் நடைபெற்று வருகிறது. இது வெளியில் தோன்றுவதில்லை. "எனக்கு எதைத் தின்றாலும் ஜீரணமாகும்", "மாட்டின் ஆகாரம் கூட எனக்குப் பொருந்தும்", "குதிரையின் குடல் போன்றது என்னுடைய குடல்", "இரும்பைத் தின்றாலும் எனக்கு ஜீரணமாகும்" என்றெல்லாம் மக்கள் கூறுவதுண்டு. ஆனால் இப்படிக் கூறுகின்றவர்கள் பதினைந்து வருடங்களுக்கப்பால் கப்பல் சாய்வது போல்-மரங்கள் விழுவது போல் அடியற்றுப் போய்விடுவதைக் காணலாம்.

எனவே நாம் பிரகடனப்படுத்துவோம்; புரோத சக்தி மிகுந்த மாமிசம், முட்டை, மீன், பாலேடு முதலியவற்றோடு உருளைக் கிழங்கு ரொட்டி, மிட்டாய்கள், மாவு பதார்த்தங்கள், காய்கறி வகைகள் இவற்றை கலந்து உண்ணாதே.

வெண்ணைக்கும் ரொட்டிக்கும் இதே பொருத்தக் கேடுதான் உண்டாயிருக்கிறது.

மனிதன் மாமிச உணவு, தாவர உணவு இரண்டையும் தனித்தனி கையாண்டு வருவதற்குத் தயாராக வேண்டும். இரண்டும் வெவ்வேறு இயல்புடையன. இரசாயனக் கூறுகள் வாய்ந்தன. இவை பால் வரும் ஆராய்ச்சிகளை இன்னும் கவனித்து வருவது மக்கள் கடனாகும்.

தேரையரும் உருளைக்கிழங்கும்.

தேரையர் தமிழ்வைத்திய சிகாமணி. பல அரிய வைத்திய நூல்களை இயற்றியவர். அகத்தியமுனியின் சீடர்களில் ஒருவர். உருளைக்கிழங்கைப்பற்றி இவர் கூறுவதாகச்சொல்லப்படும் கதை கவனிக்குந்தரமாகும். ஆதியில் உருளைக்கிழங்கு அமெரிக்காவிலிருந்து இந்தியாவுக்குக்கொண்டுவரப்பட்டதாகக்கூறப்படுகின்றது. ஆனால் அது தேரையர் காலத்திற்கு முன்னரா பின்னரா என்பது சரித்திர ஆராய்ச்சியாளர் கவனிக்கவேண்டிய விஷயம். தேரையர் கூறும் கதையாவது: மாமிச பக்ஷணிகளாகிய அசுரர்களோடு தேவர்கள் போர்புரிய முடியாதவர்களாகி, தன்வந்திரி மகரிஷியிடம் முறையிட்டதாகவும், மகரிஷி, மாமிசத்திற்கு ஒப்பாக விளங்கும் உருளைக்கிழங்கைப் புசித்து வந்தால் அசுர பலம்பெறுவர் என்று சொல்லக்கேட்ட தேவர்கள் உருளைக்கிழங்கைத் தின்று அசுரரை வென்றதாகக் கூறுகிறார் தேரையர். கதை எப்படியேனும் இருக்கட்டும். இக்குறிப்பிலிருந்து உருளைக்கிழங்கில் மாமிசசத்து இருப்பதை பூர்வீக காலமுதல் தமிழர்கள் அறிந்துள்ளார்கள் என்பது கவனிக்குந்தரமாகும்.

எட்டிப்பறிக்கும் பழமரங்கள்.

"எட்டாதகொப்பிலிருக்கின்ற அக்கனியை எப்படிக் கொய்திடுவேன்" என்று எட்டாக்கனிகளை பறிப்பதற்கு வழியற்று கொட்டாவிவிட்டுச் சென்றதாக தன்னாலாகாத காரியத்தைப்பற்றி பாட்டாகப்பாடினார்கள். நெடுமரங்களில் ஓங்கி வளர்ந்த கொம்புகளில் கனிகளும் காய்களும் கிடக்கக் கண்டால் அவற்றைப் பறிப்பதற்கு இயலாது ஏங்குவது மக்களின் இயற்கை.

ஆனால் இன்னும் பத்து வருடகாலங்களில் இந்தவிதமானதொல்லைகள் இருக்காது என்று ஆராய்ச்சியாளர்கள் அறிவிக்கிறார்கள். ஆப்பிள், ஆரஞ்சு, மா, பலா ஆகிய நெடுமரங்களையெல்லாம் இனி 6 அடி உயரத்திற்மேல்வளர விடாமல் தடை செய்து கைக்கு எட்டும் விதத்தில் அவற்றின் கிளைகளையும் கொம்புகளையும் கட்டுப்படுத்தி, அவற்றில் குலைகுலையாக காய்களும் கனிகளும் உண்டாவதற்கு எற்ற குள்ள மரங்களாக்கிவிடுகின்ற அற்புதமான சாதனைகளை செடி விவசாய ஆராய்ச்சிப் பண்ணைகள் நமக்கு வெளியிட்டு வருகின்றன.

மரங்கள் ஆறடி உயரத்திற்கு மேல் வளரக்கூடாது. மூன்று வருடங்களில் காய்கள் காய்க்க வேண்டும். ஒவ்வொரு மரங்களையும் இரண்டு மூன்று அடிகள் தூரத்தில் நடவு செய்யவேண்டும் என்ற நிபந்தனைகளின் பெயரில் அமெரிக்காவிலுள்ள ஒரு பிரபலப்பொருந்திய பழத்தோட்டக்காரர் செடி அபிவிருத்திப் பண்ணைக்கு எழுதிக்கேட்டு ஆர்டர் கொடுக்க அதன்படி அந்த ஆராய்ச்சிப்பண்ணையிலிருந்து அவருக்கு செடிகள் அனுப்பப்பட்டுள்ளன. இதனைக் கேள்விப்படுகின்ற எவரும் நப்பிக்கை கொள்ளார்கள். ஆனால் அவருடைய விருப்பம் நிறைவேற்றப்பட்டது. செடி வளர்க்கும் ஆராய்ச்சிப் பண்ணையில் அவை சாதிக்கப்பட்ட ஒரு பெரிய சாதனையாகும்.

நெடிய மரங்களை குள்ளமாக வளர்ப்பதற்கு பிரான்சிலும் சுவிச்சர்லாந்திலும் 17-வது நூற்றாண்டிலேயே முயற்சிக்கப்பட்டது. ஆனால் அமெரிக்காவில் இப்பொழுதுதான் அதில் வெற்றி கண்டார்கள். அங்கு விவசாயக் கல்லூரிகளில் கைகண்ட அனுபவமாக வளர்த்து பலன் பெற்றுவிட்டார்கள்.

பெரிய மரங்களை சிறு மரமாக வளர்க்கும்முறை மிகவும் சுலபமான ஒரு காரியம் என்று கூறுகிறார்கள். சாதாரணமான ஒரு பெரியஜாதி மரத்தை இன்னொரு பெரியஜாதி மரத்தின் வேரிலிருந்து ஒட்டி எடுக்கப்படுவதால் இந்தமாதிரி மரம் மிகவும் குள்ளமாக வளர்வதற்கு இடமாகிறதென்று அறிவிக்கப்பட்டுள்ளது. இப்படி ஒட்டி எடுக்கப்படும் மரங்கள் மிகவும்மெதுவாக வளர்கின்றனவாம். ஆனால் காய்கள் நிறைய காய்க்கின்றனவென்றும், சடுதியில் காய்க்க ஆரம்பித்துவிடுகின்றனவென்றும் 'கூறப்படுகின்றது. இவ்வளவு குறைந்த காலத்தில் எப்படி அவைகள் காய்க்கும் பருவத்தை அடைகின்றதென்பது ஆராய்ச்சியாளர்களுக்கு இன்னும் புலப்படாமலேயே இருக்கின்றது.

சாதாரணமாக ஓங்கி வளரும் பெரிய மரங்கள் ஏழுவருடமுதல் பதினான்கு வருடம் சென்றபின்னர்தான் காய்க்க ஆரம்பிக்கின்றது. ஆனால் இந்த குள்ள மரங்கள் இரண்டுமூன்று வருடங்களில் பூத்துக்காய்க்கின்றன. பருமனிலும் குணத்திலும் எண்ணத்திலும் அவை ஆச்சரியகரமாக சிறந்துவிளங்குகின்றன. ஒரு பெரிய மரம் வளர்க்கும் இடத்தில் இரண்டுமூன்று குள்ள மரங்களை வளர்க்கவும் முடிகின்றது.

இவ்வாறு ஒட்டி வளர்க்கப்படும் மரங்களில் இவ்வளவு பலன்கள் கிடைத்துவந்தாலும் ஒரு விஷயத்தில் மட்டும் நம்மை ஏமாற்றக்கூடியதான நிலையில் இருந்து வருகின்றன இந்த மரங்கள் நீடித்தகாலம் இருப்பதில்லை, அத்துடன் இவைகளை எலி, அணில், போன்ற அழிமதி செய்யும் பிராணிகளிலிருந்தும் காப்பாற்றுவதற்கு தனிமுயற்சி எடுக்கவேண்டியதுமாகும்.

நெஞ்சு பொறுக்குமா? நினைத்துப் பாருங்கள்!

ஒரு முகம்

அண்ணாந்து பார்க்க முடியாத அடுக்கு மாளிகைகள் ஒன்றையொன்று அழகுப் போட்டியிட்டதுபோல் மா நகரங்களைப் பல மைல் நீளம் அலங்கரித்துக் காட்சியளிக்கின்றன பளிங்கு மாடங்களும், பதுமராகக் கூடங்களும் நிறைந்த மகர மாளிகைகள் என்றைக்கும் புத்தம் புதியவைபோல் சித்தங் குலையவைத்து ஸ்தம்பிக்கச் செய்கின்றன. அந்திவானத்தின் அழகுபடியும் ஆழிக்கரையோரமாய் அமைக்கப் பெற்ற அரண்மனைகள் ஆங்காங்கு எத்தனை, எத்தனை? சிற்றருவி பாய்ந்து சிலுசிலு வென்றோடி வரும் நீர்க்கரையில் அங்குமிங்கும் நின் றொளிரும் நிர்மலமான வசந்த மண்டபங்கள், விசித்திர மண்டபங்கள், இந்திர பவனங்கள் எத்தனை, எத்தனை?

கங்கை புரண்டோடும் வங்கநாட்டு மருங்கில், கடலை தூர்த்து வாங்கிய கலோபாக் கரையில், (பம்பாயில்) கடும்பனி யுறையும் ஹரித்துவாரத்தில், உதகையின் கொடுமுடியில், சிம்லாவின் சித்திர விதானத்தில், பூனா மலையில், பூம்பொழில் வாயிலில், ஏரித் துறைகளில், வாவிக் கரைகளில்ஸ்படிகக் கற்களால், கண்ணாடி மெருகால், கால் வைக்கக்கூசுகின்ற மால்கள், மான்ஷன்கள், பாலஸ்கள் எத்தனை எத்தனை என்று சொல்லப்படுமா? எண்ணப்படுமா? இன்றும் நிர்மாணிக்கிறோம். இவற்றிற்கென பொன்னும் மணியும் வாரி இறைக்கிறோம். ஒருசில அரசர்கள், ஒருபிடி செல்வந்தர்கள், ஒரு சிறு பிரபுக்கள் குந் நயிருப்பதற்கன்றோ!..........

மறு முகம்

அதோ, பாருங்கள்! ஆயிரமா? பத்தாயிரமா? இலட்சமா? கோடி கோடி மக்கள்!-ஈசல்கூட்டங்கள் போன்று-சட்டிகளையும், பெட்டிகளையும் தலையில் தூக்கி, பிள்ளைகளையும் குட்டிகளையும் முதுகில் சுமந்து, கோழிகளையும் நாய்களையும் கூட்டிச் சென்று, ஊர் ஊராய் அலைந்து குடில் போட்டு வாழ்வதைப் பாருங்கள்!—மிருகங்களும் விரும்பாத குகைகளில், பன்றிகளும் நுழையாத குடில்களில் சீயும் சிறுநீரும் நாறி, நாயும் வாழாத குப்பைக்குழிகளில் மக்கட் கூட்டம் செத்துக்கிடப்பது போல் கிடந்துழல்வதை அதோ, பாருங்கள்!—நடுத் தெருவில் "நாராயணா" என்று உருள்வதை, புழுதிக் காட்டில் போதமிழந்து புரள்வதைப் பாருங்கள்!

குடியிருக்க ஒரு கட்டமண்கூட இல்லாத இவர்கள் எத்தனை கோடி என்று எண்ணிப்பாருங்கள். பட்சிகளுக்கு கூடுண்டு. காட்டு மிருகங்களுக்கு குகைகள் உண்டு. இந்த மனிதப் பூண்டுகளுக்கு தலைசாய்க்க இடமில்லை. ஆண்டிகளாய், பரதேசிகளாய் குடிக்கூலிக்கும் இடமில்லாத குப்பச்சிகளாய், ஒதுக்கிடம் கிடையாத ஒப்பனைக்காரர்களாய் நிலையற்று நெட்டழிந்து கிடப்பதைப் பாருங்கள். ஈரமுள்ள நெஞ்சத்தார்களே! ஒருமுறையேனும் உங்கள் திருக்கண்களைத் திறந்துபாருங்கள்!—பார்த்தும் என் சொல்லப்போவீர்கள்!—அடபாவமே, நாதியில்லையா? நாய்க் கூட்டங்களா? செத்து விழுந்து தொலைவதுதானே!—என்று கூறுமா உங்கள் உள்ளம்! உள்ளத்தில் கைவைத்து ஒருமுறை எண்ணிப்பாருங்கள்!—அவர்கள் இந்த நாட்டுக்காரர்கள்! இந்த நாட்டை ஆள்வாருக்கு வாக்குக் கொடுக்கும் ஓட்டுக்காரர்கள்!!

இவை தெரியுமா?

1. ரஸம்: (Mercury)
இது ஒரு ரஸாயன உலோகம். துரித வெள்ளி என்று கூறுவார்கள். சாதாரண சீதோஷ்ணத்தில் இது நீர் போன்றிருக்கும். 38 டிகிரியில் கொண்டு வரும்போது கட்டிமையாகும். 675 டிகிரி உஷ்ணத்தில் கொதிக்கும். இது மிகவும் கனம் வாய்ந்தது. ஒரு கன சதுர இஞ்சு அரை இராத்தல் எடை கொண்டது. சுத்தமான சரக்கு வெள்ளியின் நிறமும் பளபளப்பும் உடையது. இதுதெர்மாமீற்றர், பரோமீற்றர் போன்ற விஞ்ஞான நுட்பக் கருவிகளுக்கு உபயோகப்படுத்தப்படுகின்றது.

2. மொராக்கோ.
தோலில் இது ஒரு இனம். புத்தகங்கள் பைண்ட் செய்வதற்கு இது உபயோகப்படுத்தப்படுகிறது. ஆதியில் இது வெள்ளாட்டின் தோலினால் செய்யப்பட்டு மூர் ஜாதியார்கள் உடையாக இதனை அணிந்து வந்தார்கள். இதில் என்ன விசேடமென்றால் முன் காலத்தில் இந்த தோல் பதனிடுவதற்கு முன்னரேயே சாயத்தில் தோய வைத்திருந்து பின்னர் பதனிடப்பட்டது. இதில் அழகான இரேகா சித்திரங்கள் அமைந்து விளங்கிற்று. இப்பொழுது மெஷின்கள் மூலம் எல்லா வித ஆட்டுத்தோல்களிலும் பல வித வர்ணங்களில் இந்த இனம் வெளிவருகின்றன.

3. குளுகோஸ்.
இது முந்திரிப்பழம் வேறுவித தித்திப்புக் கனிகளிலிருந்து எடுக்கப்படும் ஒரு ரஸம். நிறமில்லாமலிருக்கின்றது. மனித இரத்தத்திலும் இது இருக்கிறது. கரும்புச் சீனியிலிருந்தும் இப்பொழுது தயார் செய்யப்படுகிறது. இது அதிக இரத்த சக்தி வாய்ந்தது.

4. கிளிஸரைன்.
கொழுப்பிலிருந்து தயார்செய்யப்படுகிறது. திண்ணமும் பளபளப்புமுடைய திரவப்பொருள். இதர மருந்து வகைகளுடன் இது சேர்க்கப்படுகிறது. இது நீரைக் கவர்ந்து இழுக்கும் சக்தி உடையது பன்னீருடன் சமபாகமாகக் கலந்து உபயோகித்தால் தோல் மிருதுத்தன்மையும் அழகும் கொடுக்கும்.

5. மென்தால்.
பெப்பரமெண்ட் ஆயில் குளிர வைத்து எடுக்கையில் வெள்ளை வெளேலென்ற ஒரு மணல் பருவம் கிடைக்கின்றது. இதுவே மென்தால் எனப்படுவது.

6. கடற் குதிரை.
கடலில் வாழும் ஒரு வகைப் புழு. ஏழு அல்லது எட்டு அங்குலம் நீளம் மட்டுமே உளது. இதன் தலை மட்டும் குதிரை வடிவத்திலிருப்பதால் இதனைக் கடற் குதிரை என்று அழைக்கிறார்கள்.

7. பளிங்கு.
பளிங்கு கற்கள் என்று கேள்விப்பட்டிருக்கிறோம். மிகவும் திண்மையும் பளபளப்பும் வாய்ந்து கண்ணாடி போன்று விளைச்சலடைந்த சுண்ணாம்புக்கற்களையே பளிங்கு என்கின்றனர். மிகப்பூர்வீக காலமுதற் கொண்டே கிரேக்க ரோமன் அரண்மனைகளில் இவை இடம் பெற்றுள்ளன. அமெரிக்காவிலும் இங்கிலாந்திலும் ஏராளமாய் விளைகின்றன.

8. கொம்பரக்கு.
இது ஒருவித அரக்கு. சேர்க்கைப்பொருள். சாயம் போடுவதற்கும், மருந்திற்கும் உதவியானது. இவ்வினத்தில் பல இருக்கின்றன. அவலரக்கு என்பதும் இதில் ஒரு ரகம். தட்டார் இதனை உபயோகிக்கின்றனர்.

9. உருளரிசி.
இதுவே கொத்துமல்லி என்பது. கரிசல் நிலத்தில் பயிராகும் செடி. உஷ்ணத்தைத் தணிக்கும் சம்பார சரக்கு. இலை மணமுள்ளது. கறி வகைகளில் மணத்திற்காகச் சேர்த்துக்கொள்வர்.

10. டாமஸ்க்
சல்லடை போன்ற சணல் நாரில் நெய்யப்படும். ஒரு ரக துணி. சிரியா தேசத்திலுள்ள "டாமஸ்க்" நகரத்தில் இது முதலில் செய்யப்பட்டதால் இந்த பெயர் வாய்ந்தது. இப்பொழுது இந்த ரகத்துணிகள் எங்கும் நெய்யப்படுகின்றன. முன்னர் சணல் நாரில் நெய்தது போக, இப்பொழுது பட்டு, பருத்தி, கம்பளி இவை கலந்த சேர்க்கை நூலில் தயாரிக்கப்பட்டு வெளிவருகின்றது.

எத்தகைய மோட்டார் டிறைவர்கள் நமக்கு வேண்டும்?

இந்த கேள்விகளுக்கு நீங்களே பதில் கூறலாம். விவரீதமோ அல்லது தீர்க்கதரிசனமோ அவசியமில்லை. நிதானமாக ஒரு பக்கமிருந்து அடியில் நாம் குறிப்பிடும் மனித சுபாவங்களை பரிசீலித்தால் தானுகவே விளங்கிவிடும். ஆணுயிலும் பெண்ணுயினும் இந்தக் குணங்களை கவனியுங்கள்.

முரட்டுத்தனம்

குருட்டு நினைப்பில் ஒட்டுகின்ற முரட்டுத்தனம், காட்டாளன் போக்கு, அந்நியர் மெச்சுவதற்கு என்று பிடாரி வேஷம் கட்டுதல்.

கவலையில்லாமை

சுரணை கெட்ட தன்மை, நிசாரமான தீர்பானம், சமயத்திற்கு வருவதோ, பிறரைப்பற்றிய எண்ணமோ, சாமான்களைப்பற்றிய நினைவோ இல்லாமல், நினைத்த நேரம் தின்பது உறங்குவது வருவது போவது என்ற குணம்.

எல்லாம் இரகசியம்

வெளியிடாமல் எல்லாம் இரகசியம் என்ற எண்ணம். உண்மையை பூட்டி வைப்பது. எவரையும் வகைவையாது மௌனம் சாதிப்பது.

எதிலும் குறுக்கிடுதல்

பேச்சுக்களில் தானுகவே புகுந்து, தானே பிரசங்கியாகுதல். குழந்தைகளையோ, நோயாளிகளையோ குழந்தைகளையோ கவனியாதிருத்தல். ஒருவருடையதை இன்னொருவருக்கு தானுகவே எடுத்துக் கொடுத்தல்.

உறவு கொள்ளுதல்

ஜனங்களோடு இலகுவில் பழகிக்கொள்ளுதல், புதிய நண்பர்களாக சீக்கிரத்தில் தழுவிக்கொள்ளும்குணம். அவர்களிடம் தனது செல்வாக்கை உபயோகப்படுத்துவதில் அதிக கவனம்செலுத்துதல்

கெட்டிக்காரத்தனம்

புத்தியை உபயோகியாத கெட்டிக்காரத்தனம் என்ன ஆகும் என்று நினையாது சரீர சக்தியை நம்பி அதிவேகமாகச் செல்லுதல் அதாவது கிறுக்குத்தனம்.

வெட்கப்படுதல்

கூட்டங்களில் கலப்பதற்கு கூசுதல். தலைவர் சொல்லுவதில் தப்பு இருந்தாலும் எடுத்துச் சொல்வதற்குப் பயப்படுதல்.

சரீர பலமின்மை

தனது சரீர பலம் பற்றி தனக்கேதெரியாதிருத்தல். வெள்ளெழுத்து, வாத நடுக்கம், மெய்மறதி, உறக்கச்சோர்வு இவைகளை அறியாதிருத்தல். இந்நிலைமை தெரிந்திருந்தும் தெரியாத்தனமாக பாவித்தல்.

ஆண் பெண் மோகம்

ஆண் பெண்ணையும், பெண் ஆணையும் ஆசைவைத்து கருத்திமுத்தல், கடனை மறந்து சேட்டை செய்ய ஆரம்பித்தல். இதனுல் பேர் ஆபத்து நிமிடத்தில்தோன்றிவிடலாம்.

இந்த விஷயங்களைப் பார்த்து நீங்களே தீர்ப்பு கூறுங்கள். விவாதங்கள் ஆவசியமில்லை. ஸர்டிபிக்கேற்றுகள் எழுதுவதற்கு இவைகள் போதும்.

உறு துணை.

1 குளிர்ந்த நீரில் குளியுங்கள் உடம்பின் சூடு குறையும் குணம் பெருகும்.

2 கண்களின் தூசிவிழுந்தால் கண்களை கசக்காதீர்கள். சுத்தமானநீரை கண்களில் நிறைய விடுங்கள். தூசி வெளியே வந்துவிடும்.

3 உடம்பு அதிக சூடாய் விடுவதாலேயே தலைமயிர் உதிர்கிறது. வாரமிருமுறை எண்ணெய் ஸ்நானம் செய்துவர தலைமயிர் உதிர்வது நின்றுவிடும்.

4 காலுக்கு பூட்ஸை விட செருப்பு மிகுந்த ஆரோக்கியத்தை அளிக்கின்றது. பூட்ஸ், கால்களை இறுகப் பிடித்து இரத்தஓட்டத்தையும் தடைசெய்கிறது.

5 கால்வெடிப்புக்கு ஒருசிறு கைமருந்து கேளுங்கள்: சுண்ணும்பையும், விளக்கெண்ணெயையும் குழைத்தால் "ஸ்நோ" போலாகிவிடும். அதனை வெடிப்பில் போட போய்விடும்.

6 எருமைப்பால் ஜீரணமாவதற்கு அதிகநேரம் வேண்டும். பசும்பால் சீக்கிரமாக ஜீரணமாகிவிடுகின்றது. குழந்தைகளுக்குப் பசும்பால்தான் பொருத்தமுடையது.

7 மூளை தெளிவாகஇருப்பது காலை நேரம்; அதனுல் காலையில் படிப்பது அதிக சிறப்புடையது.

8 வீட்டில் வௌவால் வராமல் தடுப்பதற்கு சூரிய வெளிச்சமும், காற்றும் நன்ருகப் படும்படி வசதி செய்துகொள்ளவேண்டும்

9 உருளைக் கிழங்கு ஜீரணமாவதற்கு மூன்றரைமணி நேரம் தேவை. முட்டையும் இதேபடிதான்

10 வெற்றிலை பாக்கு போட்டுக்கொள்வதால் நாக்கு தடித்துவிடுகிறது. பேசும்பொழுதும், பிரசங்கம் செய்யும்போதும் வார்த்தைகள் தெளிவாக உச்சரிப்பதற்கு இடஞ்சல் கொடுக்கும்.

11 உழைக்காமல் உண்பது உண்டுண்டு உறங்குவது தொந்தி பருப்பதற்கு இடமாகும்.

12 வெயிற்காலத்தில் முகத்தில் ஏற்படும்முகப்பருக்களுக்கு தினமும் ஐந்தாறு தடவை குளிர்ந்த நீரில் முகத்தைக் கழுவிக்கொள்ளுவதால் தடைபடும்.

புதுப் பொருள்கள்

மார்க்கட்டில் வர காத்திருக்கின்றன.

தொய்ந்து கொடுக்கும் அலுமீனிய சஞ்சி.

மடித்துக் கட்டுவதற்கு ஏற்ற முறையில் அலுமீனிய சஞ்சிகள் வெளிவந்திருக்கின்றன. ஆகாரங்களை வைத்து சுவரில் தொங்கவிடுவதற்கு ஏற்றதாக அமைக்கப்பட்டிருக்கிறது. 3 அவுன்ஸ் உணவுப் பொருளும் 4 அவுன்ஸ் தண்ணீரும் அல்லது 6 அவுன்ஸ் கூழ் பருவ உணவும் இதில் வைத்துக் கொள்ளலாம். இந்த உணவுகளை வைத்து காற்றுப் போகாதபடி கட்டி வைத்துக் கொள்ளலாம். சஞ்சி ஒன்றுக்கு ஒரு பைசாவுக்கும் குறைந்தவிலைதான் அடங்குகிறது. இதனை பெரிய தொழிற்சாலைகளில் செய்து பெருமிதபாக வெளியிடுவதற்கு ஆலோசிக்கிறார்கள். இதனை A.B.C Packing Machine Corp கம்பெனியர் தயாரித்திருக்கிறார்கள்.

மெஷின், காப்பி தயாரித்து தானுக விற்கின்றது.

காப்பியை தானுக தயாரித்து விற்பனை செய்யும் ஒரு மெஷினை மெலிக்கியன் அன்றட் கம்பெனியார் கண்டுபிடித்து வெளியிட்டிருக்கிறார்கள். ஒருகப் காப்பியின் விலை ஒரு சிறு நாணயத்திற்கு விற்கப்படுகிறது. நாணயத்தைப் போட்டுவிட்டால் போதும். பாலும்சீனியும் தானுகவேகலந்து சூடான காப்பி காகித கப்பு ஒன்றில் வெளியே ஒரு தட்டத்தில் ஏந்தி வெளிவருகிறது. அப்படியே எடுத்து யாரும் அருந்தலாம். விற்பனை ஆள் தேவையில்லை பெரிய ஹோட்டல்களில் ஆள் இல்லாமல் பரிமாறுவதற்கு இது ஏற்றதாகும்.

செம்பு உலோக பெயின்ட்.

கப்பல்களுக்கு ஏற்றதாக செம்பு உலோகத்தினுல் ஒருபுதிய பெயின்ட் கண்டுபிடித்து வெளிவந்திருக்கிறது. இது உபயோகத்திலிருக்கும் சாதாரண பெயின்ட்களிலிருந்து நான்கு பங்கு அதிக காலம் ஈடு செய்கின்றது. இதனை உலோக தகடுகளிலோ அல்லது மரத்திலோ பூசலாம். இதனை வெளியிட்டவர்கள் அமெரிக்கன் பைப் அன் கன்ஸ்டிரக்ஷன் கம்பனியார்.

அலுமீனிய வீடுகள்.

ரெடி சரக்காக அலுமீனிய உலோகத்தினுல் முற்றிலும்தயார் செய்த வீடுகள் விற்பனைக்கு வெளிவந்திருக்கின்றன. இரண்டு அறைகள் உள்ள 19 × 19½ அடி அளவுகொண்ட வீடு ஒன்று 970 இராத்தல் எடை மட்டுமே இருக்கிறது. இதன் சுவர், தளம், கூரை யாவும் அலுமீனியத்தால் செய்யப்பட்டு உஷ்ணம் தட்டுவதற்கில்லாத முறையில் பாதுகாப்பான பெயின்ட்களும் கொடுக்கப்பட்டிருக்கின்றன. இதில் இலகுவில் பழுது ஏற்படாது. எந்த இடத்திலும் கொண்டுபோகப்பட்டு இலகுவாக சேர்த்துக்கொள்ளலாம். இதனை வெளியிட்டிருப்பவர்கள் "ஸதர்ண் ஸ்டேட்ஸ்ஜாண் ஹாபிங் கோ" என்பவர்கள்.

குப்பை எரிக்கும் சிறு இயந்திரம்.

வீடுகளில் சேரும் கழிவுபொருள்களை எரித்து உரம்செய்வதற்கான ஒருசிறு இயந்திர அடுப்பை "வாலி வெல்டிங் அன் பாய்லர் கம்பெனியார்" தயாரித்து அனுப்பியிருக்கிறார்கள். இதில் 60 ராத்தல் வரை கழிவு பொருள்களைப் போட்டு உரமாக்கிவிடலாம். இந்த இயந்திர அடுப்பு அருவருப்பைத் தரும் கியாஸ்களை வெளியிடுவதில்லை. அதிகமான உஷ்ணத்தையும்வெளிப்படுத்துவதில்லை. தானுகவே கியாசில்எரிந்து தயார்படுத்துகிறது. ஒவ்வொரு வீடுகளிலும் வைத்துக்கொள்ளலாம்.

பெருந்தீயை அணைப்பதற்கு புகை.

கடல்போர்களில் கையாண்டு வந்த நெருப்பை அணைக்கும் ஒரு வித புகை மார்க்கட்டில் விற்பனைக்கு வந்திருக்கிறது. தண்ணீரிலும், காற்றிலும் கலந்து இந்த திராவகத்தைபெரும்புகைக் காடாக மாற்றிவிடலாம். 5 கியாலன் கொண்ட திராவகம் 800 கியாலன் புகைநுரையை வெளிப்படுத்துகிறது. ஒரு தனிமனிதன் இதனை கையாண்டு பெருந் தீயை அணைத்துவிடலாம். நாஷனல் போம் ஸெஸ்டம் இன்கார்ப்பரேடெட் என்ற கம்பெனியார் இதனை வெளியிட்டிருக்கிறார்கள்

மலேரியா சுரத்திற்கு புதிய மருந்து.

அமெரிக்காவிலுள்ள வின்திராப் கெமிக்கல் கம்பனி மலேரியா சுரத்தைத் தடுப்பதற்கு புதிய

மருந்து ஒன்றை கண்டு பிடித்து வியாபார முறையில் வெளியிட்டிருக்கிறார்கள். குளோரோகுயின் என்ற மருந்து இதில் 25 கிராம் அளவு சேர்க்கப்பட்டிருக்கிறதாம். 100 குளி கைகளுக்கு $6\frac{1}{4}$ டாலர் விலை மதிப்பிட்டிருக்கிறார்கள்.

மெதுவாக உருகும் ஐஸ்.

ஐஸ் சடுதியில் உருகி நிராகி விடும். இதனை தடுப்பதற்கு ஐஸ் தயாரிக்கும்போதே அதில் சில கலப்புப் பொருள்கள் சேர்த்து ஸெனித் புரொஸெஸிங் கம்பனியார் தயாரித்து வெளியிட்டிருக்கிறார்கள். இந்த ஐஸ், சாதாரணரகத்தைவிடவும் 37 சதமானம் மெதுவான ஸ்பீடில் உருகும் குணம் படைத்திருக்கிறது. தொலை யிடங்களுக்கு பழ வர்க்கங்கள், காய்கறிகள் முதலியவற்றை அனுப்புவதற்கு இது அனுகூலமா யிருக்கிறது. சாதாரண ஐஸிலிருந்து டன் ஒன்றுக்கு இரண்டு டாலர் விலை அதிகமாகிறதாகச் சொல்லப்படுகிறது.

தொழிற்சாலை தொழில்களைக் காட்டும் தூரதரிசினி.

அருகில் அபாயமிருப்பதாலும் வெகு தூரத்தில் இருக்க நேர்ந்தாலும் தொழில் நடக்கும் விதங்களை கியாமரா மூலம் பார்த்துக்கொண்டிருப்பதற்காக ஒரு தூரதரிசினியை "பார்ன்ஸ்வெர்த் டெலிவிஷன் அன் ரேடியோ கார்ப்பரேஷன்" கம்பெனியார் வெளியிட்டிருக்கிறார்கள். தொழில் நடக்கு மிடங்களில் ஒரு கியாமரா, ஒளிபரப்பி, இரண்டு பவ்வா இஞ்சின் இணைப்பினால் இது ஆக்கப்பட்டுள்ளது இந்த மெஷின் முற்றும் 121 இராத்தல் மட்டுமே எடை கொண்டது.

உருளைக்கிழங்கு விளைவு எடுக்கும் மெஷின்.

உணவு மெஷ்னரி கார்ப்பரேஷன் (Food Machinery corp) என்ற கம்பெனியார் உருளைக் கிழங்குகளை நிலத்திலிருந்து மண்ணைப்பறித்து கிழங்கை வெளியிலெடுத்து மண் கல் இல்லாமல் துப்பரவு ஆக்கி நீரில் சுத்தம் செய்து மைகளில் கட்டிமுடிக்கும் மெஷீன் ஒன்றை கண்டுபிடித்திருக்கிறார்கள். மணி ஒன்றுக்கு 300 ராத்தல் கிழங்கை இது தோண்டி எடுத்து கட்டிவைக்கிறது. இதனை முன்னர் 15பேர்கள் செய்துமுடித்தனர். இந்த மெஷீனிலுள்ள சக்கரங்களுக்கு ரப்பர் போட்டு பொதியப்பட்டிருக்கிறது.

"Help! What Is This Strange Creature?"

from the daily newspaper THE WASHINGTON POST, Washington, D.C., U.S.A.

உலக சமாதானச் செய்தியை ரஷியாவுக்கு எடுத்துச்செல்கின்றது அமெரிக்க வெண்புறா. ஸ்டாலினும் மாலட்டோவும் அதன் வருகை கண்டு பிரமிக்கின்றனர். இது வாஷிங்டன் போஸ்ட் என்ற பத்திரிகையில் கண்ட ஒரு கார்ட்டூன்.

மனதைக் கொள்ளை கொண்ட மந்திரம்.

1915-ல் ராக்பெல்லரின் கரி இரும்பு கம்பனியில் சம்பள உயர்வுக்காக வேலை முடக்கம் செய்ததில், அமெரிக்கத் தொழில் உலகமே கண்டிராத பயங்கர விழைவுகள் ஏற்படலாயின. அப்பொழுது ஜாண் டீ ராக்பெல்லர் கொடிய சண்டாளன் எனக் கருதப்பட்டார். இரத்தப்பெருக்கும் உயிர்ச்சேதமும் சொத்துநஷ்டமும் அளவிலடங்காமற்போயின. ராக்பெல்லரை பிடித்து ஆப்பிள் மரத்தில் கட்டித் தொங்க விடுவதென்று தொழிலாளர்கள் உறுதிகொண்டிருந்தனர். நிலைமையை எவராலும் சமாளிக்கமுடியாமற் போய்விட்டது.

இத்தருணத்தில் ராக்பெல்லர் தனது எதிரிகளான தொழிலாளர்கள் அனைவரையும் தானாகவே தனது பக்கம் திருப்பிவிடுவதற்கு முயற்சி எடுத்தார். அதில் வெற்றியும் பெற்றார். எப்படி? இதுதான் கதை. தொழிலாளர் பிரதிநிதிகளனைவரையும் வரவழைத்து ஒரு சொற்பொழிவு செய்தார். சொற்பொழிவு மிகவும் மகத்தானது. கவர்ச்சிகரமானது. அதிசய விழைவுகளை உடனடி உண்டுபண்ணியது. அவர் எதிரிலிருந்தவர்களை நினைத்துப்பாருங்கள். அவருடையகழுத்தில் கயிறு இட்டு ஆப்பிள்மரத்தில் கட்டித்தொங்கவிடுவதற்கு தயாராக இருந்தவர்கள்என்பதை மறந்துவிடாதீர்கள் அத்தகைய எதிரிகளின் முன்னிலையில் நின்று அவர் பேசுகிறார்:— எனது வாழ்க்கையில் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த நாள் இது. உங்கள் முன்னிலையில் நான் இங்கு நிற்பதையிட்டுப் பெருமைப்படுகிறேன். இந்த பெரிய கம்பனியின் தொழிலாளர் பிரதிநிதிகள், உத்தியோகஸ்தர்கள், மானேஜர்கள் ஆகியோர் மத்தியில் நிற்பதற்கு பாக்கியமும்பெருமையும் கொண்டுள்ளேன். எனது ஜீவிதத்தில் இதனை நான் மறப்பதற்கேயில்லை இரண்டு வாரங்களுக்கு முன்னால் இந்தக் கூட்டம் கூடியிருக்குமானால் நான் முற்றிலும அந்நியனாகவே, உங்களில் அநேகரை அறியாதவனாகவே இன்று நின்றிருப்பேன். சென்ற வாரம் முழுவதும் உங்கள் பிரதேசங்கள் எல்லாவற்றையும் சுற்றிப் பார்த்து ஒவ்வொரு பிரதிநிதிகளையும் தனித்தனியாகக் கண்டும், உங்கள் ஒவ்வொரு வீடுகளுக்கும் சென்றும், உங்கள் மனைவிகளையும் மக்களையும் நேரில் பார்த்தும் வந்ததின்பிறகே, இன்று உங்கள் முன்னிலையில் நிற்கிறேன். இப்பொழுது நீங்கள் யாரும் எனக்கு அந்நியர்களல்லர். எனது நண்பர்கள். இந்த நட்பின் உறவினாலேயே நாம் இன்று ஒன்றுகூடி, நமது பரஸ்பர நன்மையின் பொருட்டு நமது விஷயங்களை விவாதிப்பதற்கு கூடியிருக்கிறோம். இந்தக் கூட்டம் கம்பெனியிலுள்ள எல்லோர்க்கும் பிரதிநிதித்துவம் கொடுத்துள்ளதால், நான் ஒருவகையில் பங்காளிகள், டைரக்டர்கள், தொழிலாளர்கள் எல்லார்க்கும் பிரதிநிதியாக உங்கள் தயவினால் நிற்கிறேன்''

இந்த முகவுரைப் பிரசங்கத்தில் அவர்உபயோகித்த சொற்றொடர்களைக் கவனியுங்கள். "இங்கு நிற்பதை நான் பெருமையாகக்கொள்ளுகிறேன்'', "உங்கள் வீடுகளுக்குச் சென்றிருந்தேன்'' "உங்கள் மனைவிகளையும் மக்களையும் பார்த்துவந்தேன்'', 'நீங்கள் அந்நியர்களல்லர்'', "எனது நண்பர்கள்'', ''நட்பின் உறவினாலேயே நமது பரஸ்பர நன்மையின் பொருட்டு கூடியிருக்கிறோம்'', ''உங்கள் தயவினால் நான் இங்கு நிற்கிறேன்''.

எதிரிகளின் மனதைக் கவர்வதற்கு இதைவிட இனிய மொழிகள் வேறு யாதுளது. இதற்கு நேர்மாறாக அவர்கள் முகத்தெதிரே நின்று அவர்கள் செய்த அக்கிரமங்களையும் அட்டூழியங்களையும் எடுத்துக்கூறி கடுத்த முகமும், சீறிய சொல்லும், சினத்த பார்வையும் காண்பித்து நியாயங்களை சட்டபூர்வமாக கிளப்பியிருந்தால் என்னவாயிருக்கும்? முன்னிலுமதிகமான கோபம், கொதிப்பு, கொந்தளிப்பு, புரட்சி எல்லாம் நிகழ்ந்துவிடும்.

ராக்பெல்லர் அதற்கு விடாமல் அனைவரையும் அரவணைத்துக் கொண்டார். அவர்களனைவருக்கும் உற்ற தந்தையானார். பிதாவின் வார்த்தைகளுக்குச் செவிசாய்த்த உத்தமப் புதல்வர்கள் போன்று எல்லோரும் வேலைக்குச்சென்றனர். ராக்பெல்லர் வெற்றிபெற்றார்.

பழனி
தண்டபாணி
வைத்தியசாலையின்

நிகரற்ற மருந்துகள்
எங்களிடம் கிடைக்கும்.

ஏஜண்டு:
N. திரவியர்,
இங்கிலீஷ் மருந்து ஷாப்
நாகர்கோவில்.

வைரங்களின் விலை என்னாகுமோ?

தானிய மணிகள் போன்று வைரங்கள் விளைந்து கிடப்பது கண்டு பிடிக்கப்பட்டன.

கடற்கரை வெளிகளில் கண் கொள்ளாக்காட்சியாக எங்குபார்த்தாலும்வைரங்கள்சிந்திச்சிதறிக் கிடப்பதுபோன்று உங்கள் கண்களுக்குத் தோன்றுமாயின் இது கனவு அல்லது கற்பனை என்று தானே கொள்வீர்கள். அல்லாவுடின் குகையில் கண்டதும் கற்பனைச்சித்திரம்தானே. ஆனால் எல்லாம் அப்படியல்ல. ஒரு கடற்கரை உண்மையாகவே கண்டுபிடிக்கப்பட்டுவிட்டது. உலகம் பிரமித்து வைர வியாபாரிகளையெல்லாம் ஒரு குலுக்குக்குலுக்கி தலை மயக்கம் கொள்ளச் செய்து விட்டது.

உலகமே கண்டிராத மிக உயர்ந்த வைரங்கள் தென்மேற்கு ஆப்பிரிக்காவிலுள்ள "நாமக்குவாலாந்து" என்னுமிடத்திலுள்ள கடற்கரைப் பிரதேசங்களில் சூரியன் ஒளி தவழ்ந்து பிரகாசிக்கும்பொழுது கண்கள் சிமிட்டி சிமிட்டி விழிப்பதுபோல் எங்குபார்த்தாலும் வைர மணிகள் இயற்கையாகவே விளைந்து ஜொலிப்பது கண்டுபிடிக்கப்பட்டுவிட்டது

வெகு காலத்திற்கு முன்னரேயே அந்த கடற்கரை பிரதேசத்தில் யாரும் நுழையக்கூடாது என்று தடைபடுத்தப் பட்டிருந்தது. இப்பொழுது கடுமையான காவல் அங்கு போடப்பட்டு, தகுந்த பாதுகாப்புடன் அப்பிரதேசம் விளங்குகிறது. துப்பாக்கிகளும் ரேடியோவும் கொடுக்கப்பட்ட போலீஸ் காவல் வீரர்கள் ஒட்டகங்களின்மேலிருந்து ரோந்து வந்துகொண்டிருக்கிறார்கள். கப்பற்படையைச் சேர்ந்த "லாஞ்சுகள்" இரவும் பகலும் கடற்கரையைப் பாதுகாக்கின்றன: எத்தனையோ மைல் பிரதேசங்களாகக் கிடக்கும் அந்த மணல்வெளிகளில் யாராவது புகுந்துவிடுகிறார்களா வென்பதை அறிவதற்கு எப்பொழுதும் விமானங்கள் சுற்றி சுற்றி வந்துகொண்டிருக்கின்றன. கடல் தரை ஆகாயம் இம்மூன்று வழிகளையும் கடுமையாக பாதுகாத்துவரும் இவர்கள் ஒவ்வொருவரிடமும் ஒருவரோடொருவர் தொடர்புகொள்வதற்குத் தகுந்தரேடியோகருவிகளும் கொடுக்கப் பட்டிருக்கின்றன. இங்கு யாராவது எப்பொழுதேனும் புகுந்து மணல் வாருவதைக் கண்டுவிட்டால் உடன் அவர்கள் கைது செய்யப்பட்டு ஐந்துவருட சிறை தண்டனை கொடுப்பதற்கு தென் ஆப்பிரிக்கா அரசாங்கம் பிரகடனப்படுத்தியுள்ளது.

இப்பிரதேசம் முன்னர் ஜெர்மன் கைகளிலிருந்தது. ஆனால் யாரும் இதனை அப்பொழுது கவனிக்கவில்லை. எவரும் இங்கு புகவுமில்லை. இப்பொழுது அதாவது 1927ல்தான் இது பிரிட்டிஷாரின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டது. இக்காலத்திலும் இது அவ்வளவாக கவனிக்கப்படவில்லை. ஆனால் டாக்டர் ஹன்ஸ் மெக்கன்சி என்ற பூகத்துவ ஆராய்ச்சியாளர் இங்கு புகுந்து தான் கண்ட அதிசயமான வைரத்தளங்களை அரசாங்கத்திற்கு விளக்கினார். மூன்று நாட்களில் இவர் 12420கியாரட் பெறுமானமுள்ள வைரங்கள் சேகரித்ததையும், அங்கு கண்டெடுத்த ஒரு நீல வைரம் 71½கியாரட் எடை இருந்ததென்றும் அது 2 லட்சம் ரூபாய்க்கு விலை போயிற்றென்றும் எடுத்துக்கூறினார். சமீபத்தில் பிரிட்டிஷ் பார்ளமென்டில் ஒரு பார்சல் வைரங்கள் அங்கிருந்து கொண்டுவந்ததை காண்பித்தபோது பிரிட்டிஷ் பார்ளமென்ட் மெம்பர்கள் "ஸ்தம்பித்து மெய் விதிர்த்து" அப்படியே மௌனிகளாகிவிட்டார்கள்.

பிரபலம் பொருந்திய வைர வியாபாரிகளும், மிகப்பிரசித்தி வாய்ந்த "டி பியர்ஸ்" என்ற வைரம் வாங்கும் சின்டிகேட் கம்பெனியும் நிலை குலைந்தமாதிரி, மார்க்கட்டில் வைரங்கள் குவிவதைப்பார்த்து, தங்களைப் பாதுகாக்கும்படி தென் ஆப்பிரிக்கா அரசாங்கத்திற்கு மனுச்செய்துள்ளார்கள். வைர மார்க்கட்டை நடுங்க வைத்திருக்கும் இந்த நிலைமையை உணர்ந்துகொண்ட தென் ஆப்பிரிக்கா அரசாங்கம் அப்பிரதேசங்களை தனது வசப்படுத்தி 20 மைல் சுற்றளவுள்ள மிக உயர்ந்த வைரம் விளைந்து கிடக்கும் பூமியை மின்சாரக்கம்பிகளால் வேலியிட்டு கடுமையான பீரங்கித்துருப்புகளை நாற்புறமும் வைத்து காவல் காத்து வருகின்றது. அரசாங்கம் இங்கு கிடைத்து வரும் வைரங்களை புதைபொருள் போன்று சேமித்து வெளியில் இன்னும் விடவில்லை. இதன் மதிப்பு யாருக்கும் தெரியவொட்டாதபடி பரம இரகசியமாக வைக்கப்பட்டிருக்கிறது. உலகமெங்கும் இதுகாலம்வரை சேகரித்து வைக்கப்பட்டுள்ள வைரங்களின் மதிப்புக்கும் அப்பாலிருக்குமென்றும் கூறப்படுகிறது. பூகத்துவ ஆராய்ச்சியாளர்கள் வெகுசீக்கிரத்தில் உலகம் பிரமிப்புகொள்ளும் ஒரு அற்புதமான தகவலை வெளியிடக்கூடுமென்று எதிர்பார்க்கப்படுகி

(21-ம் பக்கம் பார்க்க)

ஓர் புத்தகக் கம்பெனியின் மகத்தான சாதனை.

லண்டனிலுள்ள பாயில்ஸ் புத்தகக் கம்பெனியின் புகழ் உலகம் பரவியது. அக்கம்பெனியில் 30 மைல் நீளமுள்ள "ஷெல்ப்"களில் புத்தகங்கள் இருக்கின்றன. அதன் கட்டிட வசதிகள் ஒன்பது ஏக்கர் விஸ்தீரணமுடையது. மூன்று கோடிக்கும் மேற்பட்ட புத்தகங்கள் அங்கு இருக்கின்றன. புத்தகக் கம்பெனி, புத்தகங்களை விற்பதிலும் வாங்குவதிலும் உலகில் எந்தக் கம்பெனிக்கும் இது ஈடில்லாத விதம் நடந்துவருகிறது. கம்பெனியினுள் ஒரு சித்திர சாலை, ஒரு இரவல் புத்தகசாலை, சங்கீத றெக்கார்டு ஷாப், ஒரு பிரசங்க பேடை, ஒரு விவாத மேடை ஆகிய பல ஸ்தாபனங்கள் பொது ஜனங்களுக்காக நிறுவப்பட்டிருக்கின்றன. அக்கம்பெனியினுள் எவரும் பிரவேசித்து புத்தகங்கள் வாங்கவோ, அல்லது தனது சொந்த புத்தகங்களை விற்கவோ, இரவல் பெறவோ, அல்லதுபகல்முழுவதுமிருந்து வாசிக்கவோ செய்யலாம். எப்பொழுது பார்த்தாலும் அக்கம்பெனியினுள் ஆயிரக்கணக்கானவர்கள் சினியாக் கொட்டையினுள் போவது போன்று போயும் வந்தும் இருக்கிறார்கள்.

அக்கம்பெனிக்கு தினமும் 20,000 முதல் 30,000 வரை கடிதங்கள் தபால் வழியாக வருகின்றன. தினமும் மலைபோல் வந்து குவியும் புத்தகங்களை தெரிந்து அடுக்குவதற்காக அங்கு 700 பேர்கள் வேலை செய்கின்றார்கள். ஆகாத புத்தகங்கள் மட்டும் பிரதி வாரமும் 4 டன் வரை காகிதத் தொழிற்சாலைக்கு அனுப்பப்படுகின்றன. பழைய புத்தகங்கள் எவ்வளவு வந்தாலும், எதுவாயினும், எந்த நிலையிலிருந்தாலும் அவர்கள் அவற்றை அப்படியே பழைய விலைக்கு வாங்குகிறார்கள். அங்கு வரும் புத்தகங்கள் தவிர, லண்டன் நகரைச் சுற்றியும் இதர கிராமங்களைச் சுற்றியும் வந்துகொண்டிருக்கும் அக்கம்பெனியின் லாறிகளும் பழைய புத்தகங்களை வாங்கிய வண்ணமாகவே இருக்கின்றன.

பாயில்ஸ் கம்பெனிக்கு ஏராளமான சொந்த புத்தகக்கடைகளிருக்கின்றன. அவர்கள் கையில் சேர்த்து வைத்திருக்கும் மருத்துவ சாஸ்திர நூல்கள் அளவற்றவை. கீழ்தேச புத்தகங்கள் என்ற ஒரு பகுதியில் கீழ்நாட்டிலுள்ள எல்லா பாஷைகளிலுமுள்ள புத்தகங்களும் அங்கு கிடைக்கும். தத்துவ சாஸ்திர நூல்களும், பிரீமேஸனரி நூல்களும், அபூர்வ கையெழுத்து நூல்களும் அவர்களிடம் அளவிறந்திருக்கின்றன.

இரவல் கொடுப்பதற்கென்று பத்து லட்சம் நூல்கள் ஒதுக்கி வைத்திருக்கிறார்கள். குறைந்த விலை புத்தகங்களை வெளியிட்டு 2,50,000 பேர்களுக்கு சந்தாவாரியாக பிரதிமாதமும் அனுப்புகிறார்கள். வருடத்தில் ஒருமுறை லண்டன் "வெஸ்ட் என்ட்" ஹோட்டலில் அக்கம்பெனியார்கள் நூலாசிரியர்களுக்கென்று ஒரு தனி விருந்து நடத்துகிறார்கள். இதில் 2000 பேர்கள் வரை சாதாரணமாகக் கலந்துகொள்ளுகிறார்கள். உலகில் தலைசிறந்து விளங்கும பேராசிரியர்கள் அதில் பங்குபெற்று அரிய சொற்பொழிவு செய்து வருகின்றார்கள். கம்பனியின் அழைப்பிற்கு இணங்கி விஜயம் செய்தவர்களில் மேரி மகாராணி,' வின்ஸ்டன் சர்ச்சில், பெர்னாட்ஷா, அர்னால்ட் பென்னட் ஆகியவர்களுமாவார்கள்.

இவர்களேயன்றி அக்கம்பெனியில் நுழைகின்ற சாதாரண மக்கள் வருடம்தோறும் 2 கோடி ரூபாய்க்கு புத்தகங்கள் வாங்குகிறார்கள். உலக யுத்தத்தின் போது அங்கு தினமும் பத்தாயிரம் புத்தகங்கள் விற்பனையாயின. புத்தகம் வாங்க இயலாத ஏழை மாணவர்கள் அங்கு எத்தனை ஆயிரம் வந்தாலும் அவர்கள் அங்கிருந்து இலவசமாக வாசித்துப்போவதற்கு இடவசதியளிக்கப்பட்டிருக்கிறது. அவ்வாறு வாசித்து பட்டம் பெற்ற ஒருவர்தான் இன்று இங்கிலாந்தில் தொழில்கட்சித் தலைவராயிருக்கும் ஹெர்பர்ட் மாரிஸன் என்பவர்.

இங்கிலாந்திலிருந்து இந்தக் கம்பெனிக்கு எவராவது ஒரு புத்தகத்தின் விலையை விசாரித்து கடிதம் எழுதினால், அவருக்கு உடனேயே மறு தபாலில் அவர்கள் விலையை எழுதுவதில்லை. அதற்குப் பதிலாக அந்தப் புத்தகத்தையே அனுப்பி வைக்கிறார்கள். இப்படி அனுப்பப்படும் புத்தகங்களில் பத்தில் ஒன்பதும் புத்தகம் கேட்டவரிடமே தங்கிவிடுகின்றன.

ஒரு முறை பாயில்ஸ் கம்பெனியார்கள் எந்த புத்தகம் வாங்கினாலும் இராத்தல் ஒன்றுக்கு இரண்டு அணாவென்று விளம்பரம் செய்து அரிய புத்தகங்களையெல்லாம் விற்பதற்கு முன்வந்தனர். இதர புத்தகக் கம்பெனிகளெல்லாம் பெருங் கூக்குரலிட்டு புத்தக வியாபாரமே அழிந்துவிடும் என எதிர்த்தார்கள். காய்கறி வியாபாரமா பாயில்ஸ் கம்பெனிக்காரர்கள் செய்கின்றார்கள்

எனக் கேள்வி கேட்டார்கள். அதற்குப் பதிலாக உல்லியம் ஆல்பிரட் பாயில்ஸ் என்ற கம்பெனி சொந்தக்காரர், "காய்கறி வியாபாரத்தால் என்ன நஷ்டம் வந்தது? எனது தந்தை உண்மையிலேயே ஒரு காய்கறி வியாபாரி தான்" என்று பதிலளித்தார்.

உல்லியம் ஆல்பிரட் பாயில்ஸ் என்பவர் அளவுக்கு அதிகமான வருமானவரி அரசாங்கத்திற்கு செலுத்தி வருகின்றார். அரசாங்கம் தனது வருமானத்தில் வளரட்டும் என்பது அவரது அவா. ஆதலாலேயே அவர் ஒரு கோடீஸ்வரராக இன்னும் ஆகவில்லையாம்.

உல்லியம் ஆல்பிரட் பாயில்ஸ் என்பவர் 60 வயது சென்ற நரைத்த ஒரு கிழவர். மிகுந்த தமாஷ்காரர். இவ்வளவு பெரிய ஸ்தாபனத்தை வளர்த்து உலகம் புகழும் விதம் நடத்தி வருகின்ற அவர் தனது ஹைஸ்கூல் (10வது கிளாஸ் படிப்பைக்கூட முடிக்கவில்லை. என்ன ஆச்சரியம்!

★

(19-ம் பக்கத் தொடர்ச்சி)

றது. வைரங்களின் பாதுகாப்புச் சட்டம் நிராகரிக்கப்பட்டு மார்க்கட்டில் சுதந்திரவியாபாரம் செய்வதற்கு பிரகடனம் விடுப்பதாயிருந்தால், இப்பொழுது அரசிளங்குமரிகள் விரல்களிலும், சீமாட்டிகள் செல்வத் தம்பிராட்டிகள் கைகளில் இலங்கும் வைரங்கள் எல்லாம் இனி அணு விலைக்கு வந்துவிடுமோ என்ற பயம் காட்டுத்தீப்போல் பரவி வந்துகொண்டிருக்கிறது.

இதனை உபயோகித்து வாருங்கள்.

எதனை? எங்கு கிடைக்கும்? என்று கேட்பீர்களாகில், எங்கும் கிடையாது. விலைக்கும் அகப்படாது. கடனுக்கும் கிடையாது. இரந்தாலும் கிட்டாது. அவ்வளவு சிறப்பு வாய்ந்ததுதான். களவு செய்து எடுத்துக்கொள்ளலாம் என்றால் அது எவருடைய சொத்தும் அல்ல. ஆனால் அதனைப் பெறுகின்றவர்கள் அளவிலா மகிழ்ச்சியும் ஆனந்தமும் அடைகிறார்கள். வரம்பிலா ஊதியத்தைப் பெறுகின்றார்கள். எல்லோருக்கும் இனியவர்களாய் விளங்குகின்றார்கள். வாழ்வு மனோகரமாய் அமைகின்றது. அதனை உடையவரும், அதனைக் கொடுத்து உதவுவோரும் ஒருவர்க்கொருவர் உன்மத்தம் கொண்டு விடுகின்றனர். ஆதலால் உங்களிடமே அமைந்து விளங்குகின்ற அதனை உபயோகிப்பதற்கு மறந்து விடாதீர்கள். எதனை? மீண்டும் கேட்கிறீர்களா? அதுதான் முகத்தில் ஒளிதவழும் **"முல்லைச் சிரிப்பு"**.

வங்காள வெள்ளை மத்தாப்பு

அலங்காரத்திற்காக கண்ணைப் பறிக்கும் அழகிய வெள்ளைவர்ண ஒளியை இலகுவில் யாரும்செய்து பார்க்கலாம்.பண்டிகை நாட்களில் தீப அலங்காரத்தின் பொருட்டு செய்துகொள்ளும் வர்ண மத்தாப்பு தினுசுகளில்வங்காள வெள்ளை மத்தாப்பும் ஒன்று. இதனை செய்யும் முறையாவது பழைய கட்டி காகிதத்தை குழல்போல் அதாவது ஒரு இஞ்சு அல்லது ஒன்றே கால் இஞ்சு குறுக்களவில் ஆறு இஞ்சு அல்லது எட்டுஇஞ்சு நீளத்தில் செய்துகொள்ளுங்கள். காகிதத்துக்குப்புல் நன்கு ஒட்டிக்காய்ந்ததும் மத்தாப்பு செய்வதற்குத் தயாராகிவிடும். பிறகு இதனில், காய்ந்த களிமண்ணை, காகித குழலில் தூர் அடைத்துக்கொள்ளும்படி கொஞ்சமிட்டு குழாயினுள் சரியாகப் புகும் ஒரு கம்பு கொண்டு அதனை மட்டமாகவும் இறுகலாகவும் இடித்து சரிப்படுத்தியபின்,

சால்ட் பீற்றர்........... 4 பங்கு
ஸல்பர்..................... 1 பங்கு
ஸல்பைட் ஆப் ஆன்டிமணி 1 ப

இந்த மூன்று பொருள்களையும் கலந்து, கொஞ்சம் கொஞ்சமாக காகிதக் குழாயினுள் செலுத்தி மெதுவாக அமுக்கி குழாயின் மேல்வாய் வருமட்டும் போட்டு வைத்துக்கொள்ள வேண்டும்.பின்னர் வெடிமருந்துப் பொடியைத் தண்ணீரில் குழப்பி அதன் மேல்வாயில் பூசி வைத்துவிட்டால் எந்த சமயத்திலும் எடுத்து தரையில் நிறுத்திவைத்து கொழுத்தினால் மிக அழகாகநின்று எரியும். இதற்குத்தான் வங்காள வெள்ளை மத்தாப்பு என்று பெயர்.

H. E. 330

எறும்பு உபத்திரவம்.

அரண்மனைமுதல் வெறுமனை வரை எறும்புகள் காணப்படுகின்றன. இவை வண்டு இனத்தைச் சேர்ந்தது. முதுகெலும்பு கிடையாது. இவற்றில் பல சாதிகள் இருக்கின்றன சிற்றெறும்பு, கட்டெறும்பு,செங்காலெறும்புஆகிய பல உண்டு. இவைகளில் ஆண், பெண் அலி ஆகிய மூன்றும் உள்ளன. சமுதாயக் கட்டுப்பாடுகள் மாதிரி இவை ஜீவிக்கின்றன. அலி வர்க்கம் மிகுந்த சுறு சுறுப்பு உடையது. வசந்தகாலத்தில் உணவுகளைச் சேகரித்து வைத்துக் கொள்ளும். சைநியங்கள் செல்வதுபோல் அணியணியாக இடம் விட்டு இடம் செல்லும். பழத் தோட்டங்களையும் வீடுகளையும் இவை இருப்பிடமாகக் கொண்டு பெரிய தொந்திரவுகளை உண்டு பண்ணிவிடும்.

வீட்டெறும்பு என்று சொல்லப்படுபவைகளில் மஞ்சளும்சிவப்பும் கலந்த நிறமுள்ள ஒரு சிற்றெறும்பு சாதி மிகுந்த தொந்திரவுகளை கொடுக்கும். உணவாதிகள் இருக்குமிடத்திற்கு தரையிலுள்ள வெடிப்புகளின் வழியாகச் சென்றுவிடும் ஒரு பண்டங்களையும் சுத்தமாக வைக்கவிடாமல் கெடுத்துவிடும். இதனை மாற்றுவது சிறிது சிரமமான விஷயம் தான். கர்பாலிக் அல்லது மண்ணெண்ணை தெளித்து மாற்ற முயன்றால் சாமானங்கள் தொலைந்துபோகும். தரையிலுள்ள வெடிப்புகள் துவாரங்கள் இவற்றை சுண்ணாம்பு, ஸெமின்ட் கொண்டு அடைத்துவிடுவதுதான் முதற் கடமை. ஆனால் எங்கிருந்தாயினும் திரும்பவும் கூட்டம் கூட்டமாக வந்துவிடும். இவற்றை எவ்விதம் மாற்றுவது? விஷம் கலந்த சர்க்கரையை அங்கங்கே வைப்பதானால் மனிதஉயிருக்கு ஆபத்து வந்தாலும் வந்துசேரும். உணவாதிகள் இருக்குமிடங்களில் மிகவும் எச்சரிக்கையாக இருக்கவேண்டும் எனவே இரண்டு நாட்களுக்கொருமுறை ஒரு பங்கு மண்ணெண்ணையில் ஏழு பங்கு தண்ணீர் கலந்து அங்கங்கேஅடிக்கடிதெளித்தால் சிறிது நாட்களில் விலகிவிடக்காணலாம்.

பொன்னில் பொறிக்க.

1. வியவற்க வெஞ்ஞான்றும் தன்னை.
2. கடன் கொண்டுஞ் செய்க கடன்.
3. பிறர் குற்றம் பேசாதே.
4. பெருக்கத்து வேண்டும் பணிதல்.
5. பற்றற்ற கண்ணும் பழமை பாராட்டு.
6. பகுத்துண்டு பல்லுயிர் ஓம்பு.
7. அற்றாரைத் தேறுதல் ஓம்புக.
8. யான் எனதென்னுஞ் செருக்கறு.
9. உள்ளத்தாற் பொய்யா தொழுகு.



பீரட்டிலிருந்து மெக்காவுக்குச் செல்லும் முஸ்லீம் யாத்ரீகர்கள் புண்ணிய தினத்தன்று செல்வதற்கின்றி தவித்தபோது, அமெரிக்க அரசாங்கம் தனது இராணுவ விமானங்களை அவர்களின் உதவிக்காக அளித்து 3763 யாத்திராவாசிகளை சமயத்தில் கொண்டு செலுத்திய காட்சியை இப்படம் சித்தரிக்கின்றது. கைமாறு கருதாத இந்த அமெரிக்காவின் கைங்கரியத்தை அரேபியாவிலுள்ள 4 கோடி முஸ்லீம்களும் வாயாரப் புகழ்கின்றனர்.

வீட்டுத் தோட்ட வேலை.

வீட்டின் முன்னும் பின்னும் சிறுதோட்டம் அமைந்திருந்தால் அழகாயிருக்கும். பூஞ்செடிகளும் புஷ்பக்கொடிகளும் வீட்டிற்கே அலங்காரம். அவ்வீட்டில் வாழ்வோருக்கு ஒரு ஆனந்தம். வீடுகளில் மேசைகள் நாற்காலிகள் முதலியன இருப்பதுபோல், வீட்டின் முகப்பில் அழகிய செடிகளும், புறத்தில் அமைந்த மரங்களும் இருத்தல் அவசியம். எந்த சிறு வீட்டிலும் செடிகள் வளர்ப்பதற்கு இடமுண்டு.

கிராமங்களில் வசிப்பவர்களுக்கு ஏராளமான இடங்கள் கிடைக்கும். நகரங்களிலிருப்பவர்களுக்கு தனித்தோட்டங்கள் வசதியாக இல்லாதிருந்தாலும் ஜன்னல்களில், தாழ்வாரங்களில், மேல்த்தளங்களில் செடிகள் வளர்ப்பதற்கு முயற்சி எடுக்கலாம். இதற்கு செடி வளர்ப்பதில் ஆசையும் இவற்றைப்பேணுவதில் கருத்தும் இருந்தால் எல்லோரும் அவரவர்கள் இடத்திலேயே தத்தக்கு ஏற்றதான செடிகளையும் கொடிகளையும் வளர்க்கமுடியும்.

வீட்டின் முற்றத்தில் முல்லைக் கொடிகள்போன்ற இனிய மணம் தரும் பூங்கொடிகளும் பின்புறத்தில் காய்கறிச் செடிகளும், அதிக இடமிருந்தால் கனி மரங்களும் வைத்துக்கொள்ளலாம். இவைகளுக்கென்று பிரம்மாதமான உழைப்பு ஆவசியமில்லை. தனிச் செலவுகளும் கிடையாது.

பெண்களும் குழந்தைகளும் நாளடைவில் கவனம் செலுத்திக் கொள்வார்கள். காலையிலும் மாலையிலும் அரைமணி நேரம் செலவு செய்துவந்தால் போதுமானது. அதன்பொருட்டு தனித்தண்ணீர் கொண்டுவரவும் ஆவசியப்படாது. வீடுகளில் சிந்துகிற தண்ணீரைத் தேக்கி செடிகளில் பாயும்படி பார்த்துக்கொண்டாலே போதுமானது.

செடிகள் தனியாக வீடுகளில் வளர்ந்தால், வீட்டில் எஞ்சுகின்ற தண்ணீர் பாழாகாமல் அங்கங்கே தங்கி துர்நாற்றமும் எடுக்காமல் அன்றன்று உபகாரப்பட்டும்விடும் பண்டபாத்திரங்கள் சுத்தப்படுவதினால் கிடைக்கும் அழுக்கும் வண்டலும் சாம்பலும் உரமாகி செடிகளுக்கு உரமாகிவிடும். செடிகள் வளர ஆரம்பித்து புஷ்பங்கள் மலர துவக்கிவிட்டால் பெண்களும் குழந்தைகளும் அவைகளில் தனியாக கவனம் செலுத்துவார்கள். புஷ்பங்களின் அழகும் மணமும் வீட்டிற்கே ஒரு தனி இன்பத்தை அளிக்கும். வீட்டிலுள்ளார்க்கு மட்டுமன்றி அவ்வீட்டினருகே செல்வோர்களுக்கும் அவை இனிய காட்சியளித்து அவர்களை மனோரம்மியப்படுத்தும்.

பொதுவாக தோட்டவேலை ஓய்வு நேரத்தை உபயோகப்படுத்துவதற்கு ஏற்றதான ஒரு பொழுது போக்கு. பெற்றோர்கள் இதில் கவனம் செலுத்துவதைப் பார்க்கும் குழந்தைகளும் அதில் இயற்கையாகவே நாட்டம்கொண்டுவிடும். குழந்தைகள் புஷ்பங்களிலும் காய்கனிகளிலும் மிகுந்த ஆசை காட்டும் இயல்புடையன. இத்தகைய பழக்கத்தால் சிறுவயதிலேயே அவர்களுக்கு வேலையில் ஆர்வமும், பொருள்களைப்பேணுவதில் கருத்தும் காலை மாலைகளில் தண்ணீர்விடும் அப்பியாசங்களும் அடையப்பெற்று வாழ்க்கையிலுள்ள சிறுசிறு பொறுப்புகளையும் படிப்படியாகக் கற்றுக்கொள்வார்கள்.

வீடுகளில் செடி வளர்க்கும் இந்த ஆர்வத்தில் ஒரு முக்கியமான விஷயத்தை மறந்துவிடக் கூடாது. அதாவது கண்களுக்கு அழகு ஊட்டுவது என்ற ஒரே குருட்டாட்டத்தில் முற்றிலும் முழுகிவிடக்கூடாது. மரங்கள் நடுவதிலும் செடிகொடிகள் உண்டு பண்ணுவதிலும் எப்பொழுதும் உபயோகமான தினுசுகளைத் தெரிந்து எடுத்துக் கொள்வதில் மிகுந்த அக்கரை காட்டிவரவேண்டும். அனாவசியமான காட்டு வர்ணச்செடிகளையும் கவைக்குதவாத கொடிகளையும் வளர்த்து வீண் உழைப்பு உழைப்பதற்கு இடமளித்தலாகாது. விழலுக்கு நீரிறைத்த கதையாக முடிந்துவிடாமல் எந்த வேலையாயினும் புத்திசாலித்தனமும், வாழ்க்கைக்கு அவசியமுள்ளதாகவும் வருமானத்திற்கு இடமளிப்பதாகவும் இருக்கின்றதா என்பதை கவனித்துக் கொள்ளவேண்டும். அவ்வாறு செய்வதானால் வீட்டிலுள்ள எல்லோரும் கவனம் செலுத்துவார்கள். கூட்டுறவில் எல்லோருடைய உற்சாகமும் அதில் கிடைக்கும். முயற்சி வீணாகாமலும் உழைப்பு பாழாகாமலும் இருப்பின் வீட்டுத் தோட்ட வேலை முற்றிலும் இன்பகரமாக அமைந்து விளங்கும்.

டாக்டர் பீற்றரின்
ஹோமியோபதி **கண் தைலம்**
கண் சம்பந்தமான சகல ரோகங்களுக்கும் இணையற்றது. ஒரு கெடுதியும் விளையாது.
1 அவுன்ஸ் விலை அணா 6.
ஹோமியோபதி ஆஸ்பத்திரி,
கொட்டாரம் P. O.

நாகரீகமான ரெடிமேட் ஆடைகள் எங்கு கிடைக்கும்?
கிருஷ்ணா ரெடிமேட் ஸ்டோர்,
பாலமோர் ரோடு.
நாகர்கோவில்.

கோழி வளர்த்தல்.

கோழி வளர்த்தலுக்கு இந்தியா சாதகமாய் அமைந்த ஒரு அபூர்வ நாடு. கோழி இனங்களில் மிகவும் அபூர்வ ஜாதிகளை இந்தியா ஒருகாலத்தில்வளர்த்து வந்தது. உலகில் பெயர் பெற்ற கோழி இனங்களுக்கு இந்தியக் கோழிகளும் இளைத்ததல்ல. இந்தியக் கோழிகளுக்கும் தனி மதிப்பும் சிறப்பும் இருந்ததினாலேயே ஆண்டுதோறும் அமெரிக்காவுக்கும் இங்கிலாந்திற்கும் ஏராளமான கோழிகள் கல்கத்தாப் பிரதேசங்களிலிருந்து ஏற்றுமதியாகின்றன. மேல்நாடுகளில் மிகவும் பெருமையாகப் பேசப்படும் "லெக்காண்ஸ்", "லாங்ஷாம்", "ஆர்பிங்டன்" போன்ற ஜாதிகளுக்கு ஒப்பான கொச்சி ஜாதிகள், பிரம்மபுத்ரா இனங்கள், அஸில் எனப்படும் போர்க் கோழிகள் முதலானவைகளும் இந்தியாவில் உண்டு.

இருந்தும், இந்தியாவில்கோழி வளர்ப்புத் தொழில் இன்னும் விருத்தியடையவில்லை. இந்தியாவில் கோழி வளர்ப்பு பெரும்பான்மையும் கிராமாந்தரங்களிலேயே நடைபெறுகின்றது என்றாலும் அவை நன்கு பராமரிக்கப்படாமல் மிகவும் கீழ்த்தரமான நிலையில் இருந்துவரக்காண்கின்றோம். கிராமங்களில் சாதாரணமாக வளரும் கோழிகள் ஆதரிக்கப்படாமல் வளர்ச்சி குன்றியும், எடையில் குறைந்தும், முட்டைகள் பெருகவோ அல்லது பெரிதாகவோ இல்லாமல் பல வகைகளிலும் அபிவிருத்தியில்லாமலிருக்கின்றன.

நகரங்களிலாயினும் அல்லது கிராமங்களிலாயினும் எல்லோரும் கோழி வளர்ப்பதை விரும்புவதில்லை. முதலில் அதனை ஒரு கீழ்த்தரமான தொழில் என மக்கள் கருதுகின்றார்கள். ஆனால் கோழி வளர்த்தல் எந்த வகையிலும் கீழ்த்தரமானதொழிலன்று. எந்தத் தொழிலையும் செவ்வையாகச் செய்வதாயின் செம்மையாகவே விளங்கும். கோழி வளர்ப்பு செடி கொடிகள் வளர்ப்பன போல்வதன்று. கோழிகள் உயிர்ப்பிராணிகள். சீதோஷ்ண நிலைமையை அனுசரித்து மிகச் செவ்வையாகப் பாதுகாக்கப்பட வேண்டும். தினமும் மூன்றுநான்கு தடவை பார்வை செய்ய வேண்டும். பொழுது அறிந்து உணவு ஊட்டவேண்டும். உணவின் அளவும் குணமும் கண்டறிய வேண்டும். நோய்வராது பாதுகாக்க வேண்டும். இவ்வாறான விஷயங்களில் கிராமவாசிகள் அவ்வளவு சிரத்தை எடுக்காமலும், அனுபவப்படாமலுமிருப்பதாலேயே கோழிகள் செழுமையாக வளராமல், முட்டைகள் பலுகாமல், பருமனாகாமல், புருக்கள் போன்று சிறுத்து விடுகின்றன,

கிராமத்தில் வளரும் கோழிகள் கிடைப்பதைத் தின்கின்றன. குப்பை கூழங்களில் கிடக்கின்றன. ஆபாசமும் அருவருப்பும் நிறைந்த சாக்கடை நீரை அருந்துகின்றன. இரவில் காற்று புகாதமண் குகைகளில் அடைக்கப்படுகின்றன. அவைகளுக்கு நோய் காண்பது இன்ன சமயமென்பதில்லை. நோய்களுக்கு ஏற்ற பரிகாரம் செய்வாரில்லை. ஏற்ற உணவும் அளிக்கப்படுவதில்லை. சாதாரணமான கோழிகள் இந்த நிலைமையையே அடையப்பெற்றிருக்கின்றன. அஸில் எனப்படும் போர்க்கோழிகள் மட்டுமே சிலவிடங்களில் நன்கு பாதுகாக்கப்படுகின்றன. போரில் வெல்வதற்கென அவை கவனித்து வளர்க்கப்படுகின்றன, இந்த சாதியை விடுத்த ஏனைய கிராமாந்திரக கோழிகள் அனைத்தும் மிகவும் சிறியவையாகவும், பார்வைக்கு கம்பீரமற்றதாகவும், எடையில் ஒரு ராத்தல் முதல் ஒன்றரை ராத்தல் வரையுமே காணப்படுகின்றன. இவை வருடத்தில் 60 முட்டைகளுக்கு மேல் இடுவதுமில்லை. அதுவும் ஏழு மாதங்களுக்கு அப்பால்த் தான் முட்டை இட ஆரம்பிக்கின்றன.

மேல் நாடுகளில் கோழி வளர்ப்புத் தொழில் மிகவும் சிறப்பாக நடைபெறுகின்றது. அங்கிருந்து இந்தியாவுக்குக் கொண்டுவரப்பட்டு கோழிப் பண்ணைகளில்கவனமாக வளர்க்கப்பட்டு வரும் கோழிகளும் மிக அழகாகவும் பருமனாகவும் ஏராளமான பருமுட்டைகளை இடுகின்றனவாகவும் இருக்கின்றன. இந்தக் கோழிகள் எடையில் $4\frac{1}{2}$ ராத்தல் முதல் 7 ராத்தல் வரை கனமுடையதாயிருக்கின்றன. ஐந்து மாதங்களில் முட்டை இட ஆரம்பிக்கின்றன. இருநூறு முதல் 270 முட்டை வரை இடுகின்றன. ஒவ்வொரு முட்டையும் $2\frac{1}{2}$ முதல் $2\frac{3}{4}$ அவுன்ஸ் எடை இருக்கக் காண்கின்றோம்.

இந்த நிலைமையை மேல் நாட்டுக்கோழிகள் இந்த நாட்டுக்கு வந்ததின் பின்னரேயே காணும் பாக்கியம் பெற்றோம். அவ்வாறிருந்தும் இந்தியாவிலிருந்து முக்கியமாக பிரம்மபுத்திராக் கரையிலிருந்து ஏராளமான கோழிகள் மேல் நாட்டுக்கு இப்பொழுது மட்டுமல்ல, வெகுகாலமா

(25-ம் பக்கம் பார்க்க)

★ வழுக்கி விழுந்தவை ★

மருந்து வியாபாரி விளம்பரம்

டாக்டர் உற்சாகியின் இணையற்ற கற்பகம். ஏழு வேளை மருந்தில் குணம் நிச்சயம்; அல்லது பிணம் வாபஸ் தரப்படும்.

தேவை விளம்பரம்

விவசாயி. 35 வயது. 30 வயதுடைய பெண் தேவை. இயந்திரக் கலப்பை இருக்க வேண்டும். கலப்பையின் படத்தை கடிதத்தில் சேர்த்தனுப்புக.

விற்பனை விளம்பரம்

வீடுகள் விற்பனைக்குத் தயார்- ரூ 5000, ரூ 3000, ரூ 2000 இவற்றில் எதை வேண்டுமாயினும் வாங்குங்கள். எல்லாம் இன்னும் சிறிது காலத்தில் மிகவும் குறைந்த விலைக்குக் கிடைக்கும்.

ஒரு சாயக்கம்பெனி விளம்பரம்.

அழகு என்பது வயதைப் பொறுத்த விஷயமேயல்ல, அது உயர்ந்த மாயத்தை உபயோகப்படுத்தும் ஒரு அரிய திறமை.

தண்ணீர் தர்மம் விளம்பரம்

சித்திரை உற்சவத்தின்போது கனகரத்னம் செட்டியார் அவர்களின் தர்மம் அதி விமரிசையாய் நடைபெறும். இரவும் பகலும் தண்ணீர் விடுவதற்குத் தகுதி வாய்ந்தவர்களை நியமனம் செய்திருக்கிறார்கள். எல்லோரும் எப்பொழுதும் கண்ணீர் வடிக்கலாம்

கல்யாணப்பத்திரிகை

காலை 9.30 மணிக்கு சரியாய் திருநாள் பூட்டு நடைபெறும். பூட்டும்போது தாங்கள் தவறாது விஜயம்செய்து தம்பதிகளை ஆசிர்வதிக்கும்படி கேட்டுக்கொள்ளுகிறேன்.

முனிசிபாலிற்றி விளம்பரம்

இங்கு மலம் கழித்தால் ஜலம் இல்லை. ஆதலால் எவரும் மலஜலம் கழித்தல்கூடாது.

(24-ம் பக்கத் தொடர்ச்சி)
கவே ஏற்றுமதியாகி வருகின்றன. உண்மை என்னவெனில் இந்தியக் கோழிகள் மேல்நாடுகளையும் வென்ற கோழிகள் என்பதை உணர வேண்டும். பிரம்மபுத்திரா தீரத்தில் காடுகளில் "கால்ஸ் பங்கிவா" என்ற ஒரு வகை காட்டுக்கோழிகள் இருந்தன. இப்பொழுதும் இருக்கின்றன. இந்தக் கோழிகள் மிகவும் கம்பீரமுடையவை. அழகு சிறந்தவை. அளவற்ற முட்டை இடுகின்றவை. இவைகளே முதன் முதலில் ஏற்றுமதி செய்யப்பட்டன. இவைகளை மேல்நாட்டார்கள் விஞ்ஞான முறைப்படி வளர்த்து வந்தார்கள். இந்த ஜாதிக்கோழிகளிலிருந்தே மேல்நாட்டுக் கோழிப்பண்ணைகள் பல அற்புதமான புது சிருஷ்டிப்புகளை தோற்றுவித்தன. அவர்களின் கோழி வளர்ப்பின் விஞ்ஞான கலா இரகசியம் மேம்படுவதற்குத் துணை செய்தது இந்தியக் கோழிகளே. இப்பொழுது இந்தியக் கோழிகளெல்லாம் அவர்களின் மேல்பார்வையில் இன்னும் ஒரு நூற்றாண்டு காலமாவது இருந்தால் புண்ணியம் கிடையாதா என்று வாழாக் கிடக்கின்றன.

இதனைத் தொடர்ந்த விஷயங்கள் தொழில் முரசில் இனி இடம் பெறும்.

பவுண்டன் பேனா, பாட்றி லைட்
றிப்பேர் ஸ்பெஷலிஸ்ட்
P ராஜு பிள்ளை,
கிருஷ்ணா ரெடிமேட் ஸ்டோர்
சமீபம்,
பாலமோர்ரோடு, நாகர்கோவில்.

N. P. FURNITURE,
Balamore Road,
Nagercoil.
Prop:
N. Purushothaman.

பலசரக்கு வியாபாரம்
சகாய விலைக்கு சகல சரக்குகளும்
கிடைக்குமிடம்
A. சிவராமகிருஷ்ணன்,
பள்ளிவாசல் சமீபம்,
வடசேரி, நாகர்கோவில்.

R. M. S.
Arrow Root Flour.
Sole Distributor:
R. M. Sivaraman,
Kottar, S. India.

THE AUTO SERVICE,
NAGERCOIL.
For All classes of
Motor Repairs.
Prop: Aseervatham.

What Drugs you
Require?
Please Enquire.
N. Thiraviam,
Medical Store,
NAGERCOIL.

ASOKA ARTS
For All kinds of
Paintings & Enlargements
Artist: R. Damotharan.
Post Office Jn.,
Nagercoil.

மேசையின் மேல் பரு மரங்கள்.

ஓங்கிவளரும் இயல்புடைய நெடு மரங்களைக் குறுக்கி குள்ள மரங்களாக வளர்க்கும் ஒரு அற்புதமான ஆற்றலை ஜப்பானியர்கள் பெற்றிருக்கிறார்கள். செடி கொடிகளை நவீன முறையில் வளர்க்கும் தோட்டக்காரர்களுக்கு இது எப்படி சாத்தியமாகிறது என்பது இன்னும் இரகசியமாகவே இருந்துவருகிறது. ஜப்பானியர்கள் இந்தக் கலைத்தொழிலை சென்ற 150 வருட காலமாக செய்து வருகின்றார்கள். இந்த கலையை அவர்கள் "போன்ஸே" என்று அழைக்கிறார்கள். ஆனால் இது ஜப்பானியர்களுக்கு புதிய கலையாகயிருந்தாலும் சீனர்களுக்கு இது புதியதல்ல. சீனாவில் புத்தர் காலத்திலிருந்தே இந்த தொழில் நடைபெற்று வந்ததாகவும் சீனர்களிடமிருந்துதான் ஜப்பானியர்கள கறறுக்கொண்டனர் என்றும் கருதப்படுகிறது. இப்பொழுது ஜப்பானியர்கள் அமெரிக்காவில் இந்தத்தொழிலை கையாண்டு அமெரிக்க மலைப்பிரதேசங்களிலிருந்து பல அரிய மரங்களை குள்ளமாக்கி ஜப்பானுக்கு அனுப்பிவருகிறார்கள்.

அமெரிக்காவில் ஸான்டீகோ (San Deigo) என்னுமிடத்தில் லீ நெல்ஸன் (Lee Nelson) என்ற ஒருவர் இருக்கிறார். இவர் ஒரு நாள் அமெரிக்கா காடு ஒன்றில் அபூர்வமான காட்டுப்புஷ்பங்களைப் பறிப்பதற்காக அலைந்து திரிந்து வருகையில் ஒரு ஜப்பானியன் குள்ள மரங்கள் சேகரித்து வருவதை சந்திக்க நேரிட்டு அவன் மூலம் சில அரிய இரகசியங்களை அறிந்தார். அன்று முதல் அவர் "போன்ஸே" கலைத்தொழிலில் ஆர்வம் மிகுந்து கியானடாவிலுள்ள செடி உற்பத்தித் தோட்டத்திற்குச்சென்று அங்கு ஜப்பானியர்கள் மரங்களை குள்ளமரமாக்கி ஜப்பானுக்கு ஏற்றுமதி செய்வதைப் பார்வையிட்டார். பின்னர் இத்தொழிலை நன்கு பயின்றுகொள்ளும் நோக்கத்தில் நெப்ராஸ்கா பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த விவசாய கலாசாலையில்ச் சேர்ந்து ஓர் (Ore) பிரதேசத்தைச் சேர்ந்த கார்வாலிஸ் என்னுமிடத்தில் நிலப்பண்புகளை ஆராய்ந்து படித்து வல்லுனராகி ஜப்பானியர்கள் அறிந்திருந்த குள்ள மரங்கள் வளர்ப்பு பற்றிய அறிவையும் ஞானத்தையும் அடையலானார். இப்பொழுது ஸான்டீகோவிலுள்ள லீ நெல்சன் உலகப்பிரசித்தி பெற்ற அற்புத மரவளர்ப்பு நிபுணராக வந்து, மிகவும் குள்ளமான மரங்களை வளர்த்து உலகக் காட்சிகளுக்கு அனுப்பி வருடந்தோறும் பரிசு பெற்று வருகிறார்.

ஜப்பானியர்களின் இந்தத் தொழிலை ஆவலோடு கற்றுக் கொள்ள விரும்பிய நெல்ஸன் அவர்களும் ஒரு அற்புதமான மனிதர். இவர் இத்தொழிலைக் கற்க முயன்று அதில் வெற்றி பெற்றதும் வருடாவருடம் கியானடா மலைப்பிரதேசங்களிலிருந்து மெக்ஸிகோ கடல் பிரதேசம் வரை ஐயாயிரம் மைல் வரை சுற்றுப் பிரயாணம் செய்து அற்புதமாக வளர்ந்து வரும் குள்ள மரங்களை சேகரிக்கவும், சேகரித்ததை மிக நுட்பமாக பாதுகாத்து வளர்க்கவும் ஆரம்பித்து அவர் கையிலேயே பல அருமையான மரங்கள் மேசை மேல் வைக்கத் தகுந்த முறையில் இப்பொழுது இருப்பதாகக் கூறப்படுகிறது. இப்பொழுது இவரது கையில் 250 வருடங்களுக்கு முன்னால் விதையிட்டு மலையிடுக்கில் வளர்ந்த ஒரு மரம் இருக்கின்றதாகவும், இதனைப் பத்து வருட காலமாக மிகுந்த பாதுகாப்புடன் வளர்த்து சிறு தொட்டியில் நட்டு வைத்து பல அரிய பொருட்காட்சிகளுக்கு அனுப்பி வருவதாகவும் அவரே கூறுகின்றார். இன்னும் இது நூறு வருடங்கள் வரை இருக்கக்கூடுமென்றும் நம்புகிறார். இந்த சிறு மரத்தை மலைப் பிரதேசத்திலிருந்து கொண்டு வந்து பத்து வருட காலமாக மிகவும் பக்குவமாக வளர்த்து அழகாக கத்தரித்து, அதன் கிளைகளில் அற்புதமான முடிச்சுகளும் முறுக்குகளும் விழும்படி வளர்த்து மிக ஆச்சரியப்படத்தக்கதாக வைத்திருக்கிறார். இந்த ஒருமரத்திற்கு பதினையாயிரம் ரூபாய் வரை விலை மதிப்பு கொடுக்கிறார். மரம் ஒரு சிறு தொட்டியில் மேசை மேல் வைக்கத் தகுந்ததாக அவ்வளவு சிறிய உருவு அமைந்தது. அவர் கையிலிருக்கும் பல அற்புதமான சிருஷ்டிப்புகளில் இது ஒன்று. இருபது அடி ஓங்கி வளரும் மரங்களை மூன்றடியாக குறுகி வளர்ப்பது அவரது சாதாரண பழக்கம். அவரிடம் ஆறு வருடமுள்ள ஒரு ரோஜாச்செடி உலகிலேயே மிகச் சிறிய செடியாகவும், புஷ்பிக்கும் செடியாகவும் இருப்பதாகச் சொல்லப்படுகிறது. பெரியமரங்களைக் குள்ளமாக வளர்ப்பதற்கு அவர் கையாளும் முறைகள் மரங்களுக்கு இயற்கையாக அளவு அனுசரித்து வேண்டும் உணவுப்பொருள்களை அதன் நிலத்திலிருந்து பல உபாயங்களால் கூட்டியும் கு

(28-ம் பக்கம் பார்க்க)

தக தக ததியோதனம்.

"லீலா அக்கா, இன்று உங்களைத் தேடிக்கொண்டே இருந்தேன். நீங்களும் வருகிறீர்கள். 'வாருங்கள்', என்று வரவழைத்தாள் நர்த்தன.

"என்னடி, இன்று என்றைக்குமில்லாதபடி உனது முகம் பூத்துப் பொலிகின்றது. என்ன விசேடம்?"

"விசேடம் ஒன்று மில்லை. நமது வேலைக்காரி அடுத்த வீட்டுக்கு நேற்று போயிருந்தாள் வரும்போது அவள் முகத்தைப் பார்த்ததிலிருந்தே ஏதாவது விசேடமிருக்கு மென்று எண்ணினேன். "என்னடி?" என்று கேட்டதும் "தக தக ததியோதனம்" என்ருள்.

"என்னடி, கேலிசெய்கிருயா? தக தக, திகு திகு என்ருல், நீயே ததியோதனம் போட்டாய் போலிருக்கு" என்ருள் லீலாவதி.

"லீலா அக்கா, என்ன அப்படிச்சொல்லுகிறீர்கள்? ததியோதனம் என்ருல் எனக்கு என்னவென்றே புரியலையே, அதற்குள் நீங்களும் தக தக, திகு திகுவென்ருல்?"

"அட மூடமே! உன்னை ஒரு முட்டாள் என்றுதான் சொல்ல வேண்டும். உனது வேலைக்காரி அடுத்த வீட்டில் சென்று ததியோதனம் சாப்பிட்டு விட்டு தக தக வென்று வந்து கொண்டிருப்பாள். நீ அதற்கு தக தக ததியோதனம் என்று பெயர் இட்டாய் போலும். ஆனலும் பரவாயில்லை கொஞ்சம் எரிப்பு மிச்சமாயிருந்தால் தக தக வென்று தானிருக்கும்."

"இல்லை அக்கா, அவள் சொன்னதைத்தான் உங்களிடம் சொல்லுகிறேன். நான் அவளிடம் ஒன்றும் கேட்கவில்லை".

"நீ எப்படிக்கேட்பாய். அவள் உனது வீட்டு வேலைக்காரி அல்லவா? உன்னை விட அவளுக்கு என்ன தெரியும் என்பது உனது எண்ணம். நீ மட்டுமல்ல, ஒன்றும் தெரியாதிருந்தாலும் எல்லாம் தெரிந்த பிரகஸ்பதிகள் போன்று இந்தக்காலத்துப் பெண்கள் இருப்பது வழக்கந்தான். அவள் தக தக வென்ருலென்ன, அல்லது நீ திகு திகு என்ருல் என்ன? எப்படியும் தொலையட்டும். அவளும் இல்லையே கேட்டுத் தொலைப்பதற்கு."

சரி அக்கா, அப்படியானல் "ததியோதனம்" என்ருல்?........

"என்னடி இன்னுமா தெரியலை. ததியோதனம் என்ருல் தயிர்ச்சாதம். ததி என்ருல் தயிர்; ஓதனம் என்ருல் சாதம் அல்லது சோறு. ரயிலடிகளில் வாங்கி சாப்பிட்டிருக்கிருேயில்லையோ? அதுதான். தயிரில் செய்த சாதம். அது வியாபாரப் போக்கில் செய்தது. சுத்தமாகச் செய்து சாப்பிட்டால் மிகவும் நன்ருயிருக்கும்" என்ருள்.

"அப்படியானல் இன்றைக்கே நாம் செய்து பார்க்கலாம். வாருங்கள் செய்வோம்" என்று வினயமாகக்கூறிக்கொண்டே லீலாவை சமையல்ப்புரைக்கு அழைத்துச்சென்ருள். நர்த்தன இப்பொழுது பழைய நாத்தன வல்ல. லீலா அக்காளிடம் மரியாதையாக நடப்பவளாதலாலும், அவளிடம் எல்லாம் கேட்டுத்தெரிந்து கொள்ள வேண்டுமென்ற ஆர்வத்தாலும், லீலாவின் மனம் சந்தோஷப்படும்படி சமையலறையை மிகவும் சுத்தமாகவும் பண்டங்களை சோடனையாகவும் செய்து வைத்திருந்தாள். இருவரும் அங்கு சென்றதும் ததியோதனம் தயார் செய்வதற்கு உடன் ஆரம்பித்து விட்டனர்.

(30-ம் பக்கம் பார்க்க)



அமெரிக்க ஜனதிபதி தேர்தலுக்குப் போட்டியிட்ட ஸ்டீவன்ஸன் ஸ்பெஷல் ரெயில்வே பிரசாரத்தின் போது மக்களுக்கு உற்சாகமளிக்கின்ருர். இந்தப் படம் கியாலிபோர்னியாவில் எடுக்கப்பட்டது.

ஈனக்குரலில் நின்ற சுவாசம்.

உங்களை ஒன்று நான் கேட்டுக் கொள்ளுகிறேன். அதற்காக வருத்தப்பட்டுவிடக்கூடாது. கடைசியில் அதனைக் கூறி முடிக்கிறேன். எனது விஷயங்கள் என்னோடிருந்து விடட்டும் என்பது தான் எனது எண்ணம். ஆனால் பெண் மனம் பேதை மனம்தானே. தலையிலிருக்கும் பாரத்தை யார் தூக்கப்போகிறார்கள். ஆனாலும் சற்று இறக்கி வைத்தால் தலையிலுள்ள கனமாவது குறையாதா? ....என்னைப் பெற்று வளர்த்த தந்தை மிகவும் நல்லவர்கள்தான். தாய் அவர்களை விடவும் நல்லவர்கள். அவர்களைப் பழிப்பதில் என்ன இருக்கிறது. என்னை செல்வமாகத்தான் வளர்த்தார்கள். வளர்த்து ஒரு செல்வ பதிக்கே வாழ்க்கைப்படவும்செய்தார்கள். அதில் என்ன குறை இருக்கிறது. எனது துர்பாக்கியம் என்னைப் பிடித்துக்கொண்டது. எல்லோரும் இருந்தபொழுது எனக்கு எல்லாம் இருந்தது போல்த்தான். இப்பொழுதோ யாரும் இல்லை. எனக்கும் ஏது இல்லை. இதனால் பழி யாருக்கு? பெற்றவர்க்கா? மற்றவர்க்கா?

உடன் பிறந்த ஒருவர் இருக்கிறாரே என்று ஊரார் சொல்லுவார்கள். இருந்தால் அவர் மனைவி மக்கள் நன்றாய் இருப்பதற்கு ஆகும். எனக்கு அதனால் என்ன இலாபம். அவர் இலட்சாதிபதி தான். அதனை இல்லை என்று சொல்ல முடியுமா? ஆனால் ஆள வந்தாள் ஒருத்தி அவருக்கு வாய்த்ததும் எனது துர்லபமே. பிச்சை கொடுக்க வேண்டுமென்றாலும் அவளுடைய ஆக்ஞை அவருக்கு வேண்டும். பாவம் அவர் என் செய்வார். இலையும் குலையுமாகப் பயந்து இரவு பகலாய் உழைத்துப் போடுகிறார். பணமும் சேர்ந்துவிட்டது. ஆனால் பேய் குடி புகுந்த வீட்டில் பிள்ளைக்கு என்ன வேலை அல்லது பெண்ணுக்கு என்ன வேலை?

அவர் கதை அப்படி. ஆனால் என் கதையில் இனி என்ன சொல்ல இருக்கிறது. கைத்தொழில் தெரியாது. கைப்பொருளும் கிடையாது. குடியிருக்க வீடு இல்லை. குறை கேட்கவும் ஆள் இல்லை. வேறு என்ன சொல்வதற்கு உண்டு. எந்த வீட்டிலாவது சென்று அரைவயிறு கால்வயிறு நிரப்புவதென்றால், உண்மையைச் சொல்லலாமா? அல்லது உண்மை என்று நம்புவார்களா? இவள் இன்னாருடைய உடன் பிறந்தாள் என்று கூறமாட்டார்களா?

பெரியோர்களுக்குப் பிறந்தும் பெரியோர்களால் வளர்ந்தும், பெரியோருக்கே வாழ்க்கைப்பட்டும் என்ன பலன் கடைசியில் கிடைத்தது. தாயும் தந்தையும் எப்பொழுதும் இருப்பார்களா? ஏதோ இன்னும் கொஞ்ச நாள் இராமல் இருவரும் காலமாகிவிட்டார்கள். எனது பதியையே நம்பி அவர்களும் என் பொருட்டு அக்காலத்தில் கவலை கொள்ளவில்லை. என் காலக்கதிக்கு யார் என் செய்வார்கள் பதியும்திடீரென்று சிவபதியானார். ஏதாவது விட்டுப் போனாரா என்றால் என்னைத் தான் விட்டுப்போனார்.........

நான் அனாதியா? அதுவுமில்லை. ஆள் இல்லையா எனக்கு? எம்பெருமான் மாதிரி என் அண்ணா இருக்கவே செய்கின்றார். இருந்தும் நான் நாதியற்றவள் போல் புலம்புகிறேன்.......... என் இந்த புலப்பம் என்று கேட்பீர்களா? நாதியிழந்த பெண்பிள்ளை எங்கு போய் ஒதுங்குவாள்? ஊருக்குப் பயப்படவா? உடலுக்குப் பயப்படவா? அல்லது இந்த உயிருக்குப் பயப்படவா? கையிருந்தும் கால் இருந்தும் கண் கெட்டவள் மாதிரி கதியற்று....... ஒரு வாய் அன்னத்திற்காக.......ஊர் இருந்தும்பேர் இருந்தும் உடன்பிறந்த ஆள் இருந்தும்.......ஒரு முளத் துண்டிற்காக... ... மானம் பொறுக்க முடியாமல்....... மனம்அனலாய் எரிகின்றது .... உடலை வைத்து இனி என் செய்வது? தினமும் குடல் கருகி வேகின்றது........நெஞ்சோடு....... இழுத்துச் செல்லும் சுவாசம்....போய் விடாதா? என்று எண்ணிக்.... .. குமுறுகின்ற நெஞ்சுக்கு இனி என்ன.......சொல்ல இருக்கிறது ....நீங்கள் சொல்வதற்கு........ நாழிகையில்லை....... என் கதை ... முடிந்தது!

(26-ம் பக்கத் தொடர்ச்சி)

றைத்தும் மரங்களுக்குஅளிக்கும் திறமையும், கண்காணித்து பார்க்கும் ஆற்றலும், அது அழிந்து போகாதவாறு மரத்தில் ஒவ்வொரு உறுப்புகளையும் பரிசோதித்து பத்திரப்படுத்தி வளர்ப்பதுமே என்று கூறப்படுகின்றது. எந்த மரத்தையும் எழில் ஒரு பங்காக குறுக்கி வளர்க்க முடியுமென்பது அவருடைய அனுபவ சித்தாந்தம்.

முரசொலி.

உணவு உற்பத்தி.

(டாக்டர் ஏ. இராமசுவாமி முதலியார்)

உணவுக்கட்டுப்பாடு அவசியமா அவசியமில்லையா என்ற விஷயத்தை நீங்கள் பரிசீலனை செய்வீர்கள் என்று நம்புகிறேன். நான் இதில் தலையிட விரும்பவில்லை. ஆனால் பற்றாக்குறை பிரதேசங்களுக்கு உணவாதிகளை அளிக்கும விஷயத்தை சிறிதளவு கூட கவனத்தில் கொண்டு வருவதற்கு தவறிவிட்டார்கள் என்று எனக்கு புலப்படுகின்றது. திட்டக்கமிஷன் உணவாதிகளை சேகரிக்கவும் விநியோகிக்கவும், விலைவாசிகளைக் கட்டுப்படுத்தவுமே கவலை செலுத்தியது. நான் எதனை அழுத்தமாகக் கூறப்புகுகின்றேன் என்றால் உற்பத்தி விஷயத்தில் தகுந்த கவனமோ, வற்புறுத்தலோ செய்யவில்லை என்பது தான் "அதிக உணவாதிகளை உற்பத்தி செய்யுங்கள்" என்ற பிரசாரத்தினால் எதிர்பார்த்த பலன்கள் இல்லாமலே போய் விட்டது. ஏற்கனவே உணவு உற்பத்தியாகி வந்திருந்த நிலங்களும்கூட குறைந்து விட்டது என்பதுதான் பலரின் கருத்தாகும். உணவுப்பொருள் உற்பத்தி செய்த நிலங்களெல்லாம் பல இடங்களில் அமித இலாப ஆசையின் காரணமாக வியாபாரப்பொருள்களை உற்பத்தி செய்வதற்கு மாற்றப்பட்டு விட்டதாக அறியக்கிடக்கின்றது. இந்த விஷயத்தில் விவசாயப்பொருளாதார நிபுணர்கள் கவலை செலுத்த தவறமாட்டார்களென்று நம்புகிறேன்.

வருமானம் ஒன்றையே கருதி சணல் உற்பத்தி, பருத்தி விவசாயம், கரும்புவிவசாயம் முதலியன உணவாதிகளை எதிர்த்து அரசாங்கத்தார்களின் உணவு உற்பத்தி மார்க்கங்களுக்கே பங்கம் விளைவித்து விட்டது. அரசாங்கம் ஏமாந்துபோய்விட்டது. எனவே விவசாயிகள் எந்த விதமான விவசாயத்தை மட்டும் தங்கள் கழனிகளில் கையாள வேண்டும் என்பதையும், சில இடங்களில் கட்டுப்பாடுகள் செய்யவும் வேண்டும் என்பதையும்விவசாயப்பொருளாதார நிபுணர்கள் எடுத்து விளக்குவார்கள் என்று எதிர்பார்க்கிறேன். வியாபார நோக்கங்கருதி விவசாயி இனி விவசாயம் செய்வதை அறவே ஒழித்துக்கட்டினாலன்றி நாட்டுக்குத் தேவைப்படும் உணவு உற்பத்திப் பெருக்கத்தை நமது நாட்டு விவசாயிகளின் வாயிலாக நாம் பெற முடியாதென்பதை கவனித்துக் கொள்ளவேண்டும் காலம் வந்துவிட்டதாக அறிவீர்களாக. நிலங்களில் பலவிதமான விவசாயங்கள் ஆவசியம்தான். ஆனால் புத்திசாலித்தனமும ஆவசிய சந்தர்ப்பங்களும் நல்ல விதமாக நாட்டின் தேவைக்காக உபயோகப்படுத்திக் கொள்வதுதான் வேண்டற்பாலது.

சங்கீதக் கலை.

(டாக்டர் இராஜேந்திரப் பிரஸாத்)

பொது ஜனங்களை எழுச்சி பெறச்செய்வதற்கும் அவர்களுக்கு இலகுவாக விஷயங்களை எடுத்து ஊட்டுவதற்கும் சங்கீதம் போன்ற ஒரு சாதனம் வேறு இருப்பதாக எனக்குத் தோன்றவில்லை. சமுதாய சீர்திருத்த இயக்கம், சட்டமறுப்பு இயக்கம் சுதேசிய ஆர்வம் ஆகிய நமது தேசிய இயக்கங்களில் அது நமக்கு நன்கு தெரியும் "வந்தேமாதரம்" என்ற தேசிய கீதம் உயர்ந்த பண்ணோடு பாடப்பெறும் சமயங்களிலெல்லாம் மந்திரக்கோல் போன்று நமது மனதை எவ்விதம் அது கவர்ச்சியுறச் செய்கின்றதென்பதை நாம் இன்றைக்கும் அறிந்து வருகிறோம்.

சமுதாய முற்போக்கை அடைவதிலோ அல்லது பல்வேறுபட்ட சமுதாய மக்களை ஐக்கியப்படுத்துவதிலோ அல்லது நமது குழந்தைகளுக்கு கல்வி கற்பித்து கலையறிவு ஊட்டுவதிலோ நமது இலட்சியம் எதுவாயிருப்பினும் அவைகள் அனைத்திற்கும் உபயோகமானதும் இல்லாமல் தீராததுமானது சங்கீதக்கலை என்பதை நாம் அறிந்து கொள்ள வேண்டும்.

சங்கீதம் செழிக்க.

(ஸ்ரீ வீணை சாம்பசிவய்யர் அவர்கள்)

சங்கீத உலகம் செழித்தோங்க வேண்டுமானால் இளம் பாடகர்களும் வித்தியார்த்திகளும் லக்ஷணத்துடன் சங்கீதத்தைக்கற்று தங்களுடைய மனோபாவங்களையும், கற்பனாசக்திகளையும் வெளிவரச் செய்ய வேண்டும். வேறொருவரைப் பின்பற்றுவதால் மட்டும் சங்கீத உலகில் வரவேற்பும் உயர்ந்த ஸ்தானமும் கிடைத்து விடாது. சாஸ்திர முறைப்படி சம்பிரதாயத்தைக் கைவிடாமல் சங்கீதத்தைப் பயின்று அதில் தனக்கு இயற்கையாக ஏற்பட்டுள்ள சாரீர நயங்களையும் மனோபாவங்களையும் செலுத்தி, தனக்கென்று ஒரு தனிப்பாணியை ஏற்படுத்திக் கொண்டாலொழிய "கானமயிலாடக் கண்டிருந்த வான்கோழி" என்ற தன்மை

தான் ஆகும். முக்கியமாக குருகுலவாசம் செய்து கற்றுக்கொள்ளும் சங்கீதம்தான் சிறப்பை அளிக்கும். குருமுகமாக கற்காத வித்தை பயன்படாது.

உபயோககரமான விஞ்ஞானம்.

(ராஜப்பிரமுகர்: ஸ்ரீ சித்திரைத் திருநாள் மன்னர்)

மனிதவர்க்கத்திற்கு நல்வாழ்வு அளிக்கும் விதமாக, விஞ்ஞான ஆராய்ச்சியும் அதன் கண்டுபிடிப்புகளும் சிறப்புற்று, அவற்றின் மூலம் இந்தியா உலகநாடுகளுக்கு வழி நடந்து காட்டும் அப்பெரிய முயற்சியில் நமக்கு யாதொருவிதமான கஷ்டங்களும் இருத்தல் கூடாதென்ற எண்ணம் எனது மனதில் இருந்து வருகின்றது. உலகிற்கு நமது இந்தியாவே மகரிஷிகளின் வாயிலாகக் கிடைத்த அரிய கலைஞானக் களஞ்சியங்களை அளித்துக்கொண்டிருந்தது. நமது ரிஷிமார்களும் விஞ்ஞான ஆராய்ச்சித் துறைகளில் பலப்பல சாதனைகளை உலகம் பிரமிக்குமாறு செய்துகாட்டியுள்ளார்கள். தற்காலத்திலுள்ள விஞ்ஞானிகள் அம்மகரிஷிகள்வகித்து வந்த நிலைமையைப் பெறுவதற்கு இன்னும் எட்டவில்லை என்று நான் கூறும்போது நீங்கள் தப்பாக நினைத்துவிடக் கூடாது. இதுகால பரியந்தமும் நாம் உறங்கிக்கொண்டிருந்தது போலிராமல் எதிர்காலத்தில் வரவிருக்கும் நமது சந்ததிகள் அந்த உன்னத ஸ்தானத்தை அடையக்கூடும் என்பதற்குச் சிறந்த அறிகுறிகள் காணப்படுகின்றன.

சென்ற 40, 50 வருடங்களாக நாம் ஆராய்ச்சித் துறைகளிலும், புதிய கண்டு பிடிப்புகளிலும் முனைந்து விட்டோம். அதன் பலனாகவே உலக மதிப்பு வாய்க்கப் பெற்ற நமது தலைவரான ஸர். ஸி. வி. ராமனும் இன்னும் பலரும் நமதிடை இருக்கின்றனர்.

விஞ்ஞானக் கலைவளர்ச்சிக் கழகம் விஞ்ஞான உலகில் எழுந்து வரும் வெறும் தத்துவப் பிரச்சினைகளில் மட்டும் கவனம் செலுத்தி காலம் தள்ளிவிடாமல், சாதாரண மனித வாழ்வுக்கு அத்தியாவசியமுள்ள உணவுப்பொருள்கள், விற்றமின் சத்துக்கள், தாவர சங்கமங்கள், உயிர் பிராணிகளின் உற்பத்தி மார்க்கங்கள் ஆகிய பலதுறைகளில் முனைந்து பலன் பெற்றுவரும் என்று நம்புகிறேன். விஞ்ஞானிகளின் சாதனைகள் மனிதப் பண்பாட்டிற்கு ஏற்றதான ஊழியத்தைச் செய்வதற்காக அவை பரிசுத்தமாகவும் மக்களுக்கு உபயோககரமான ஆராய்ச்சியாகவும் பரிணமிக்க வேண்டும் நூறு வருடங்களாக உலக விஞ்ஞானிகள் சாதித்தவைகள் உலகத்தையே ஒரு தனி மாற்றத்திற்கு இடமளித்து விட்டன. ஆனால் சில காலத்தில் பல நாடுகளிலும் சாதிப்பதற்காக எடுத்துக் கொள்ளப்படும் முயற்சிகள்தான் ஒரு புதிய உலக சகாப்தத்தை உண்டு பண்ணக்கூடியதாகயிருக்கும் அது மனிதனின் சமாதான வாழ்வையும் இன்ப வாழ்வையும் அளிக்கும் தாமாயிருக்கும் அந்த வழியில் நின்று நமது இளம் விஞ்ஞானிகளும் தன் கடன் ஆற்றுவர்களாக

(27-ம் பக்கத் தொடர்ச்சி)

"நர்த்தனு! முதலில் அரைப் படி அரிசியை எடுத்து $1\frac{1}{2}$ படி ஜலம் வைத்து அன்று செய்தது போல் கஞ்சி வடித்து சாதம் தயார் செய். பிறகு சாதத்தை ஒரு ஈயம் பூசின பாத்திரத்தில் கொட்டி சற்று ஆற வைத்துக் கொள். சாதம் ஆறியதும் $\frac{1}{2}$படி பால் $\frac{1}{2}$படி புளித்த தயிர் ஒரு பலம் வெண்ணை $\frac{1}{2}$பலம் பொடி செய்த உப்பு இந்த நான்கையும் அந்த சாதத்தில் சேர்த்து செம்மையாகக்கலந்து கொடு.

பிறகு இரும்புச்சட்டியை (வாணலியை) அடுப்பில் காயவைத்து நெய் இருந்தால் $1\frac{1}{2}$பலம், இல்லையானுல் என்செய்வது $1\frac{1}{2}$ பலம் சுத்தமான நல்லெண்ணை, அல்லது உனது பழக்கம் போல் தேங்காய் எண்ணையை விட்டு அது காய்ந்த பின், மிளகாய் கடுகு தாளித்ததற்கு எடுப்பது போல் எடுத்துப்போட்டு $\frac{1}{4}$பலம் உளுத்தம் பருப்பும் $\frac{1}{4}$பலம் கடலைப்பருப்பும் தாளிதத்தில் போட்டு, கடைசியாக கருவேப்பிலை $\frac{1}{8}$ பலம் கிள்ளிப்போட்டு, சடபட வென்று வெடித்த சப்தம் நின்றதும் அந்த தாளிதத்தை முதலில் கலந்து தயாராக வைத்திருக்கும் சாதத்தில் கொட்டி, நல்லமிளகு இதனை இரண்டு மூன்றுக உடைத்து $\frac{1}{8}$ பலமும் இஞ்சித்துருவல் $\frac{1}{4}$ பலமும் சாதத்தில் சேர்த்துக்கொள். கடைசியாக காயம் கொஞ்சம் சேர்க்க வேண்டும். ஒரு சிறு துண்டு காயத்தைப்பொடிசெய்து ஜலத்தில் ஊற வைத்து அந்தத் தெளிவை மட்டும் சாதத்தில் கொட்டி கலந்து பின்னர் எடுத்துவை" என்று சிறுகச் சிறுகச் சொல்லிக் கொடுத்தாள்.

செய்து முடித்தாயா? பார் இது தான் ததியோதனம். "தகதகவென்று இருக்கிறதா என்ன! எடுத்து வை சாப்பிடலாம்" என்றாள்.

நர்த்தனு அதனை ஆனந்தமாக எடுத்துப்பரிமாற இருவரும் உண்டு களித்தனர்.

"தந்தி ஸ்கூல்"

●

இரண்டு மாதங்களில்
தந்தி கற்றுக்கொள்ளலாம்.

●

முழு விவரங்கட்கு:-
பட்டேல்
இன்ஷ்டிடியூட்,
நாகர்கோவில்

நாஞ்சில் வடகம்.

சித்த வைத்திய முறையில்—
குணம்
மணம்
காரம்

வழுவர்வல் தயார் செய்து எங்கும் புகழ் பரந்து உபயோகத்திலிருந்து வருகின்றது

வெங்காய வடகம்
இஞ்சி வடகம்
வில்வ டைகம்
பிரண்டை வடகம்
வல்லாரை வடகம்
துளசி வடகம்—முதலியன கிடைக்கும்.

A. சிவராமகிருஷ்ணன்,
பலசரக்கு வியாபாரம்,
பள்ளிவாசல் வியூ,
வடசேரி, நாகர்கோவில்.

கியூரூல்

கால் வெடிப்பு
வெட்டுக் காயம்
தீப் புண்கள்
கரப்பன்
சொறி சிரங்கு
முகப்பரு
பூச்சிக்கடி—முதலியவற்றிற்கு
நிகரற்ற நிவாரணி.

குளிர்ச்சியளித்து குணப்படுத்தும்.

R. M. சிவராமன்,
ஜெனரல் மர்ச்சன்டு,
கோட்டார்.

ஜெயராம் ஸா மில்ஸ் & உட் ஒர்க்ஸ்,

வடசேரி :: நாகர்கோவில்.

எமது கம்பனியில் எலக்டிரிக் லைட் வகைக்கான தேக்கு மர கேப்பிங், கேஸிங் மற்றும் சுவிச்சு பெட்டிகள் முதலியன மிகவும் அழகான முறையில் தயார் செய்யப்படுகின்றன. கட்டிட வகைக்கும் ஏற்றதாக எல்லா வித மரமும் எங்கள் ஸா மில்லில் சையிஸ் வாரியாக அறுத்து குறிப்பிட்ட சமயம் தவறாது கொடுத்து வருகிறோம்.

கெ. வெங்கடாசலம்.

யார்?
எவை?
எங்கே?
எப்பொழுது?........என்ற அரியபெரிய

புத்தகம் 1000 பக்கங்களில்
5000 விஷயங்களுடன் வெளிவருகின்றது.

மக்கள் அறிந்திராததும்
அறிய வேண்டியதுமான
ஆயிரமாயிரம் விஷயங்கள்

எவை, எங்கே, எப்பொழுது? என்றும்
மக்கள் வாழ்வுக்கு இலக்காக விளங்கும்

விஞ்ஞானம் விவசாயம் விசித்திரம்
வியாபாரம் விகடம் ஆகிய வித விதமான

விஷயக்கோர்வைகளும், சிற்பம் சித்திரம்
நாடகம் நாட்டியப், இலக்கியம், இலக்க
ணம் சமயம் சன்மார்க்கம் சமூகம்,
அரசியல் பொருவியல் ஆகிய எண்ணி
லடங்காத விஷயங்களனைத்தும்

உங்கள் அறிவையும் அனுபவத்தையும்
அலசிப்பரிசோதித்து உங்களைப் பயிற்றுவிக்கும்

மகா அற்புதமான

பொது அறிவியல் நூற்களஞ்சியம்

★ வெளி வருகின்றது. ★

தென்னிந்தியத் தலைவர்கள், பிரமுகர்கள், அறிஞர்கள் பலரின் வாழ்க்கைக்
குறிப்புகள் புகைப்படங்களுடன், யார் யார்? என்ற பகுதியில் வெளிவரும்.
நாட்டின் பெருமக்களும் நன்மக்களும் அதில் இடம் பெறுவார்கள்.

"தொழில் முரசு காரியாலயம்"

நாகர்கோவில்.

மறைந்து கிடக்கும் பிராணிகளும் பட்சிகளும்.

அடியில் வருவது 25 வாசகங்கள். அவற்றில் பட்சிகள், மிருகங்கள், பிராணிகள் மறைந்து வாழ்கின்றன. வாசகங்களை உங்கள் குழந்தைகளிடமோ நண்பர்களிடமோ புத்தகத்தைப் பார்க்க விடாமல் போட்டு விடைகளை கண்டுபிடிக்கக் கூறுங்கள். ஒவ்வொன்றுக்கும் 4 மார்க்குகள் அளியுங்கள். 80 உத்தமம், 60 மத்திமம், 40 அதமம். நூற்றுக்கு நூறும் என்றால் அவர் ஒரு அறிஞரே.

1 அக்கா, கம்சனை வதைத்தது கண்ணன்தானே?

2 கைராட்டின் வேகத்தைப் போல் தக்கிளியிலும் சிலர் நூற்கிறார்களாம்.

3 சேச்சே, வல்லவனுக்குப் புல்லும் ஆயுதந்தானே.

4 தலைவர்கள் எதற்கு திரை மறைவில் திரியவேண்டும்?

5 அத்தான் வரமாட்டாரென்று அக்காளைக் கூட்டி வந்தாய்.

6 அம்புலியைவேண்டி அழுத இராமனை எவராலும் சமாதானப்படுத்த முடியவில்லை.

7 நண்ப, சுகமும் துக்கமும் எல்லோருக்கும் ஒன்றுதான்; கவலைப்பட்டு ஆவதென்ன?

8 தஞ்சாவூர் அப்துல் காசிம் ஹம்சத் தொனி இராகம் பாடுவதில் மிகச் சிறந்தவர் என்பார்கள்.

9 அறுபத்து நான்கு நெல் வகைகளில் அன்னமழகியும் ஒன்று.

10 சத்தம் கேட்டதுதான், கூகூ, கையோடு பிடித்து விட்டார்கள் கள்ளனை.

11 மண்சுமை நான்கு வருடம் கடின தண்டனைதான்.

12 எந்த வேலைக்கு இவன் சென்றாலும் சுணங்குவதும் முனங்குவதுதான் வழக்கம்.

13 வைத்தியரே, ஓரியாண்டல் பாம் புண்களுக்கு உபயோகிக்கலாமா?

14 குழந்தாய், அம்மான் அடித்தாரென்று அழுகிறாய்?

15 அரியும் சிவனும் ஒன்றானால் எரியும் விறகு என்னாகும்?

16 ஐயனைக்கண்டு நாக்குழறப் பாடிமெய்சிலிர்க்க ஆடுவார்?

17 அப்பா வந்ததும் அம்மா கோபிப்பாள் என்று அகன்றுவிட்டான்.

18 முல்லைப் பூ மணம் சிறந்தது சாமந்திப் பூ அழகும் மணமும் வாய்ந்தது.

19 தாழம் பூவைவிட செண்பகம் அதிகம் வாசனையுடையது என்பார்கள் சிலர்.

20 பட்டாளத்துக்காரர் கவாத்து செய்யும் மைதானம் ஒரு மைல் சுற்றிருக்கும்.

21 பரம ஞானி எல்லாவற்றையும் பரித்தியாகம் செய்தவராகத்தான் வேண்டும்.

22 முருகன் மனைவியர்களில் வள்ளி மூத்தவளா, தெய்வயானை மூத்தவளா?

23 தலையாய உரோம குருவிற்கு போப்பாண்டவர் என்று பெயர்.

24 கரிக்காலச் சோழன் அரசாண்ட காலம் எது?

25 மைவிழி மானே, மறக்காதே, வாங்கு அதனை, விலையில்லா மாணிக்கம் அது?

(விடை 35-ம் பக்கம் பார்க்க)

Pictures Framed
Glasses Silvered
S. C. Kuttalingam,
S. M. T. Building,
Balamore Road, Nagercoil.

C. N. Namboodhri.
THANVANDHRI VAIDYASALA,
H. O. Thodupuzha P. O.
Please Write to us

டி. எஸ். அருளப்பா,
கெமிஸ்ட் & டிரக்கிஸ்ட்,
நாகர்கோவில் P. O.
கிட்டாத
இங்கிலீஷ் மருந்துகள்
எங்களிடம் கிடைக்கும்.

Sundar Radios,
Meenakshipuram,
NAGERCOIL.
Please contact for
Every thing in Radios.

Sales & Repairing
Spectacles &
Fountain Pens.
K. S. ISMAIL,
TOWER JUNCTION, :: NAGERCOIL.

சரக்கின் உயர்வுக்கு
புகழ்சிறந்த கடை!
S. கிருஷ்ண பிள்ளை,
புகையிலை வியாபாரம்,
சாலை, திருவனந்தபுரம்.

சகல விதமான
சர்க்கரை தினுசுகள்
எங்களிடம் கிடைக்கும்.
எஸ்.எஸ். & கோ.,
சாலை, திருவனந்தபுரம் P. O.

பொழுதுபோக்கு

சிக்கலில் அகப்பட்ட சிந்தனையாளர்கள்.

ஒவ்வொன்றும் ஒவ்வொருவருடைய பெயர்தான். ஆனால் எழுத்துக்கள்யாவும் துன்னிக்கிடக்கின்றன. அதனை உன்னிப்பார்த்தால் கண்டு பிடித்துக் கொள்வீர்கள். ஒரு எழுத்து மட்டுமே மறைந்து கிடக்கிறது. கண்டு பிடியுங்கள்.

1 வி ன் — ம ன் ரா ஞு
2 த ங் கோ வி ர — அ
3 க — ண ர ம ம ரி
4 ரு த ர் ன் மா த் பெ —
5 ர ட் — த் டி ன தா
6 ழ் ம் ர் வா மா —
7 ர் ன க் க ரு — நா
8 கா கா ம. ம த் — ங்
9 ர் வ யு ன — மா
10 ம தீ ர் ரா ர் த் —

இரண்டு கணக்குகள்.

1 ஒரு அரசனிடம் கொஞ்சம் யானைகளும், குதிரைகளும் இருந்தன. அவனுக்கு உதவியளித்த இருவருக்கு அவைகளை அடியில் வருமாறு பங்கிட்டுக் கொடுத்தான்.

முதல்வனுக்கு மொத்த யானைகளில் எட்டு பங்கில் ஒரு பங்கும் மொத்த குதிரைகளில் ஐந்து பங்கில் ஒரு பங்கும், இரண்டாவதவனுக்கு மொத்தக் குதிரைகளில் ஆறு பங்கில் ஒரு பங்கும், மொத்த யானைகளில் ஏழு பங்கில் ஒரு பங்கும் கொடுத்தான். யானையும் குதிரையும் சேர்த்து முதல்வனிடம் எவ்வளவு எண்ணம் இருக்கிறதோ அதே தொகை இரண்டாவது மனிதனிடமும் இருக்கிறது ஆனால் அரசனிடம் இப்பொழுது யானையும் குதிரையும் சேர்த்துள்ள எண்ணம் 60 என்றால் முதலில் அரசனிடம் இருந்த மொத்தம் யானைகள் எவ்வளவு குதிரைகள் எவ்வளவு?

2 எட்டை எப்படியாவது எட்டுத்தரம் எழுதிக் கூட்டும் பொழுது "1000" வரவேண்டும் நீ எப்படி எழுதுவாய்?

(விடை 35-ம் பக்கம் பார்க்க)

குழந்தை: அம்மா, அடுத்த வீட்டுக் குழந்தை "செல்லக்குழந்தையாம்" அப்படின்னா நான்?

தாய்: நீ செல்லக்குரங்கு!

குழ: அம்மாதான் குரங்கு!

சீடன்: சுவாமி, தினமும் ஜெபம் செய்கிறேன்; ஒன்றும் பலிதமாகவில்லையே.

குரு: குழந்தாய், கடவுளின் காதில்படும்படியாக ஜெபம் செய்யவில்லை நீ!

சீடன்: செவிட்டுக் கடவுள் என்று நீங்கள் தெரிவித்திருந்தால் ஸ்பீக்கரில் ஜெபம் சொல்லியிரு..பேனே!

பையன்: மணலில் காளைகள் எப்படியப்பா வண்டியை இழுத்து வந்தது?

தந்தை: வண்டிக்காரன் காளைகளை மிருகங்களாக நினைத்து ஓட்டியிருப்பான்!

"சுகுமார ஹிருதம்"
அபூர்வ உஷ்ணரோக நிவாரணி.
P. S. வாமதேவன்,
ஸ்ரீ தன்வந்தரி ஆயுர்வேத
ஆஸ்பத்திரி,
நாகர்கோவில் P. O.

P. Subramoniam Achary,
Jeweller,
East Car Street, Nagercoil.
All Orders Undertaken
Satisfaction Guaranteed.

Get Your Watches Repaired
K. S. Panicker,
Henry Road, Nagercoil.

சரக்கு நயம்
விலை நயம்
நாணயமான வியாபாரம்
"தில்லை" மரக்கடை,
வடசேரி, நாகர்கோவில்

Our Aim
is to
Please you
VALE & Co,
Main Road, TRIVANDRUM.

For All Your Shopping
Krishna Trading House,
Post Office Junction,
NAGERCOIL

Butifully Embroidered
Pillow Cases
For Presentation
GENERAL SUPPLY AGENCY,
Nagercoil S. I.

சம்பந்தப் பேச்சு.

பெண்கேட்க வந்தவர்:

எங்கள் மாப்பிள்ளை ஐந்து பெண்டாட்டிகள்வரை வைத்து நடத்த சாமர்த்தியமுடையவர். ஒரு சினிமா இராணி, ஒரு சங்கீத மேதை, ஒரு சமையல்க்காரி, ஒரு ஆஸ்பத்திரி நர்ஸ், ஒரு இளிச்ச வாய்க்காரி; சம்மதமானல் ஐந்து பெண்ணும் எடுக்கத் தயார்தான்.

மாப்பிள்ளை பார்க்கவந்தவர்:

எங்கள் பெண்ணுக்கும் உங்கள் நோக்கம்தான். ஐந்து மாப்பிள்ளைகளுக்கும் பொருத்தமானவள் எங்கள் பெண். ஒரு ஆஜானுபாகு, ஒரு தர்மப்பிரபு, ஒரு ஆமாசாமி, ஒரு தென்னலிராமன் ஒரு சம்பிரதாயக்காரன்; சொல்லுங்கள் பேசிக்கொள்வோம்.

(33-ம் பக்கத்து கேள்விகளுக்கு விடை)

1	காகம்	14	மான்
2	கிளி	15	அரி
3	சேவல்	16	ஆடு
4	குதிரை	17	கன்று
5	காளை	18	மந்தி
6	புலி	19	சண்பகம்
7	பசு	20	வாத்து
8	சிம்ஹம்	21	பரி
9	அன்னம்	22	யானை
10	கூகை	23	குருவி
11	மைனா	24	கரி
12	சுணங்கு	25	தேவாங்கு
13	பாம்பு		

இனிமை பேசு
இணங்கி நட
இயல்வது செய்
இருப்பது பொய்
உண்மை பேசு
உள்ளங் கருது

சென்ற இதழில் வெளிவந்த வினுக்களுக்கு விடை.

1) உரோமாபுரி.
2) ஆப்ரிக்கா.
3 உரோமாபுரி.
4) பெல்ஜியம்.
5) அயர்லாந்து.
6) நீலகிரி—(இந்தியா)
7) லாஸா (திபெத்து)
8) எகிப்து.
9) ஆபர்டீன்.
10) பாலஸ்தீனம்.

கணக்கு

5 முளம் உடுப்புத்துணி	ரூ. 5
75 முளம் கைக்குட்டைத் துணி	ரூ. 15
20 முளம் பட்டுத்துணி	ரூ. 80
100 முளம்.	ரூ. 100

(34ம் பக்கத்து கேள்விகளுக்கு விடை)

சிக்கலில் அகப்பட்ட சிந்தனையாளர்கள்

1 தென்னலிராமன்
2 அரவிந்தகோஷ்
3 ரமண மகரிஷி
4 புத்தர் பெருமான்
5 பட்டினத்தார்
6 நம்மாழ்வார்
7 குரு நானக்கர்
8 மகாத்மா காந்தி
9 தாயுமானவர்
10 ராமதீர்த்தர்

இரண்டு கணக்குகள்

1 யானைகள் 56
குதிரைகள் 30

2
888
88
8
8
8
1000

உலக அறிவை உருவாக்க மொழிகளால் முடியும்.

உலக அறிவை உருவாக்கும் முறையில் மொழிகளின் பங்கு என்ன என்பதை ஆராய்ச்சி செய்ய நவீன மொழி சங்கம் மூன்றுட்டுத் திட்டமொன்றை வகுத்துள்ளது. சங்கத்தின் புதுத் தலைவர் பேராசிரியா ஹவார்டு செனிஸ்டன் சங்கக் கூட்டத்திற்குப்பிறகு கூறினதாவது:— அயல்நாட்டு மொழிகளை அறியாமலிருப்பது உலக ஞானம் பெறுவதற்கு ஓர் பெரிய முட்டுக்கட்டையாகும். அமெரிக்க மககள் பிற நாடுகளைப்பற்றி தெரிந்து கொள்ளவேண்டுமென்பது எங்கள் அவா. தலைமை தாங்கிநடத்த ஒதுக்குமுறை உதவாது. பிறநாடுகளையும் அவர்கள் கலாசாரங்களையும் அமெரிக்க மக்களறிந்து கொள்வதற்கு சுலபம் மொழிகள் மூலம்தான். அமெரிக்காவின் கல்வி அதிகாரி ஆரம்ப பாடசாலைகளில் மொழிப் பயிர்ச்சி அளிப்பது பற்றி ஊக்கம் கொண்டிருப்பது பாராட்டத்தக்கது என்றும் அவர் குறிப்பிட்டார்.

உலக உணவு உற்பத்தியைப் பெருக்க ரசாயனப் பொருள்களின் உபயோகம்.

விஞ்ஞான முன்னேற்றத்தைக் கோரும் அமெரிக்க சங்கத்தின் வருடாந்திரக் கூட்டத்தில் பேசும் பொழுது மலிவாகவும் நிறையவும் உற்பத்தியாகும் ரசாயனப் பொருள்களைஉபயோகித்து உலக உணவு உற்பத்தியை இரண்டு பங்குக்குமேல் அதிகரிக்க முடியும் என்று டாக்டர் நெஸ்டர்.

டபிள்யூ. ப்லோடின் என்பவர் கூறினர்.

பெட்ரோல் உற்பத்தியில் ஏற்படும் பாழ்பொருள்கள், நெல், ஓட் தவிடு முதலியவைகளில் உடம்புக்கு வலிவூட்டும் சத்து நிறைந்திருக்கிறது.

ஆசியா, ஆப்ரிக்கா, மேற்கு இந்தியத் தீவுகள், மத்திய அமெரிக்கா, தென் அமெரிக்கா, ஐரோப்பா இவைகளில் சில பகுதிகளிலும் உட்கொள்ளும் உணவு வகையறுட்களில் தேவையான புரோட்டிகளை பெருவதற்கு ரசாயனப் பொருள்களை சேர்த்துக் கொண்டால் நல்ல பலனளிக்குமென்று அவர் கூறினர். இம்முறையை நன்குக பாராட்டி நியூயார்க் ஹறரால்டு ட்ரிப்யூன் என்ற பத்திரிகை ஓர் தலையங்கத்தில் எழுதியுள்ள தாவது:

கோதுமை, அரிசி, சோளம் பீன்ஸ்போன்ற போஷன சத்துக்கள் குறைந்த உணவு வகையறுக்களை உட்கொள்ளுபவர்களுக்குத் தேவையான புரோட்டிகளைபெற இம்முறை நல்ல பயனளிக்கும்.

கலப்பு முறைமூலம் தேவையான இச்சத்துக்களைச் சேர்க்கலாமென்று விஞ்ஞானிகள் கண்டுபிடித்துள்ளனர். பெட்ரோல், கோல்டார், வீண் பொருள்கள் இவைகளிலிருந்து உற்பத்தி செய்ய முடியும். ஆரோக்கியத்திற்கும், பொதுநலத்திற்கும் இது செய்யும் பயன் கணக்கிட முடியாதது. அதிக சாகுபடி செய்யாமலேயே இது சாத்தியமாகும். 10 கோடி டாலர்கள் செலவில் அமைக்கப்பட்ட ஓர் தொழிற்சாலையில் உற்பத்தியாகும் அமினோ திராவகம் 10 கோடி மக்களுக்குத் தேவையான போஷன சத்தை கொடுக்கவல்லது என்று டாக்டர் ப்லோடின் கூறுகிறார். இவ்வகையில் ஜனத்தொகை, உணவு உற்பத்தி இவைகளை சரிகட்டி வருவது சாத்தியமாகும்.

அமெரிக்காவிலுள்ள பத்திகிகைகள் சுதந்தரத்தைப்பற்றி ஐ. நா. வில் விளக்கம்.

அக்டோபர் 30.

ஐ. நா. பொதுசபையின் சமூகக் குழுவினர் பத்திரிகை சுதந்தரம் உலகம் முழுவதும் நிலவஉதவும் உடன்படிக்கையின் அவசியத்தைப்பற்றி விவாதிக்கும்பொழுது. அக்குழுவில் அமெரிக்க நாட்டின் மாற்றுப் பிரதிநிதியும் சேலம் என்ற பட்டணத்தில் பிரசுரிக்கப்படும் "ஓரிகான்ஸ்டேட்ஸ்மென்" தினசரிப் பத்திரிகையில் ஆசிரியரும் உரிமையாளருமான சார்ல்ஸ் ஏ ஸ்ப்ரேகு என்பவர் அமெரிக்காவில் தற்பொழுது நிலவிவரும் பத்திரிகை சுதந்தரத்தை மிகத்தெளிவாக எடுத்துக் காட்டினர்.

அமெரிக்காவில் பத்திரிகைகள் தனி ஆதிக்க முறையில் நடத்தப்படுகிறதென்று ரஷ்யாவைச் சேர்ந்தவர்கள் கூறினதை மறுத்துவிட்டு ஸ்ப்ரெகு சொன்னதாவது:

"ரஷ்யர்கள் தெரிவித்தது போல் அமெரிக்கப் பத்திரிகைகளில் யாதொருதவறுன முறையும் கிடையாது. ரஷ்யர்கள் சொல்வதெல்லாம் வீண்பேச்சாகவே இருக்கிறது."

அமெரிக்காவில் 1173 தினசரிகளும், 543 ஞாயிறு மலர்களும், 9591 வாரப் பத்திரிகைகளும், 1421 வார சஞ்சிகைகளும், இருக்கின்றன. மேலும் மாதத்திகிருமுறை வரும் 221 பத்திரிகைகளும், 6343 மாத சஞ்சிகைகளும் மாதத்திற்கொருமுறை வெளிவரும் 625 சஞ்சிகைகளும் இருக்கின்றன. தவிர மூன்று செய்தி ஸ்தாபனங்களும் 4 ஒலிபரப்பு ஸ்தாபனங்களும், 3000-க்கு மேற்பட்ட ஒலிபரப்பு டெலிஷன் நிலையங்களும் இருக்கின்றன. இவைகள் எல்லாம் பலவகைப்பட்ட நிர்வாகத்திலிருப்பதால்தனிஆதிக்க முறையோ மற்றப்படி அடக்குமுறையோ இருப்பதாகச் சொல்லுவது பொய்க்கூற்றுதான்.

ஆர்மோனியம் முதலான இசைக் கருவிகள் ஆர்டரின்பேரில் சகாயமாக செய்து கொடுக்கப்படும்.

M. அருணசலம் ஆச்சாரி,
பணகுடி திருநெல்வேலி ஜில்லா.

உங்கள்
கருத்திற்கிசைந்த ஜவுளிகள்
எங்களிடம் கிடைக்கின்றன.

A. பண்டாரம் பிள்ளை,
ஜவுளி வியாபாரம், மைலாடி.

கோல்டன் ஸ்டோர்,
ஷாப் & புஸ்தக வியாபாரம்,
தெங்கப்புதூர்.

மாடண் பௌல்ட்றி பாம்
(கோழி வளர்ப்புப் பண்ணை)

கேவ் ஸ்ட்றீட், நாகர்கோவில்
பலவகை சுத்தஜாதி கோழிகள், முட்டைகள், கோழிக் குஞ்சுகள் முதலியன எம்மிடம் கிடைக்கும்.

கிருஷ்ண காப்பி, நாகர்கோவில்
கிருஷ்ண காப்பி, நாகர்கோவில்
கிருஷ்ண காப்பி, நாகர்கோவில்
கிருஷ்ண காப்பி, நாகர்கோவில்
கிருஷ்ண காப்பி, நாகர்கோவில்
கிருஷ்ண காபிப், நாகர்கோவில்
கிருஷ்ண காப்பி, நாகர்கோவில்

ஸ்ரீ தந்வந்தரி விலாஸ்
ஆயுர்வேத வைத்தியசாலை,
நாகர்கோவில்.

பிரசித்திபெற்ற சவனபிராசம், அகஸ்திய ரசாயனம், மதுஸல நிராசயனம் (சீனப்பால்லேகியம்) முதலாய லேகியங்களும்தசமூலாரிஷ்டம், பலாரிஷ்டம் முதலிய அரிஷ்டங்களும் தன்வந்திரம் முதலிய தைலங்களும் எங்களிடம் சகாய விலைக்கு கிடைக்கும்.

VISIT

SRI NAGARAJ STUDIO

S. M. V. BUILDINGS (SOUTH OF TOWER)
Cape Road, Nagercoil.

★

For Portraits, Groups, Enlargements,
Oil Paintings, Cinema Slides &
Ameture Service

A Trial Solicited.

போண் 111 தந்தி: வீவி

வி. வி. & பிரதேர்ஸ்

ஜவுளி வியாபாரம்

காலேஜ் ரோடு ★ நாகர்கோவில்

எல்லா விதமான

வெளிநாட்டு இந்திய ஜவுளித் தரங்களும்

காஞ்சீபுரம். மைசூர், பனாரிஸ் முதலிய
நூல் பட்டு சாரி வகையருக்களும்
சகாயமான விலைக்கு கிடைக்குமிடம்.

அமெரிக்காவில் நியூயார்க் துறைமுகத்தில் 305 அடி உயரத்தில் நிலைநாட்டி வைக்கப்பெற்ற "சுதந்திரச் சின்னம்" இது பிரஞ்சு மக்களால் அமெரிக்கருக்கு அளிக்கப்பட்டது. தலைசிறந்த ஒரு பிரஞ்சு சிற்பியால் நிறுவியது. சுதந்திரச் செல்வி தனது அடிமைத் தளைகளை முறித்தெறிந்து கையில் சுதந்திரச் சுடரொளி தாங்கி உலகோருக்கு ஒளிவீசச் செய்து காட்டும் ஒரு அற்புதமான சிற்ப சித்திரமாகும்.

J & J. DECHANE
Herbo Mineral Medicines
Park View. Nagercoil.

OUR SPECIAL
"ALBO-SANG"
Agent: S. Victor Pillai

சம்பார சரக்கில்
மிக உயர்ந்த
சரக்கு

எங்கள் L. T. பெருங் காயம்.

★

சமையலுக்கு
சம்பூரணமானது

★

பெண்களெல்லாம்
புகழ்கின்றார்கள்

★

A. சங்கரசுப்பு
& ஸன்ஸ்,
பெருங்காய வியாபாரம்,
தக்கலை (P.O)

Edited Printed & Published by: C. A. Perumal at the Thasor Press, Nagercoil.